நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 14 ஜனவரி 1992 விலை 5/-


## திருத்தொண்டா புராணம் - 1

மலைநாட்டை விலைபேசு(ம்) மாதலைவர்(க்) கடியேன்
மாசங்கத் தேரர்க்கும் மற்றோர்க்கும் மடியேன்
தலையாட்டிக் கரங்கூப்பித் தம்மபதம் பேசித்
தடம்போட்டு வீழ்த்துகின்ற தலைவர்களுக் கடியேன்
வெளிநாட்டு நிதியருக்கும், ஊவா வீதியெங்கும் மனித
வேட்டைகளை ஆடுகின்ற வீரர்க்கு மடியேன்
முழுநாட்டு மக்களுக்கும் முழங்கையைக் காட்டி
முதன்மைபெற்ற தனித்துவராம் தொண்டாவுக் காளே.

# தீர்வு சாத்தியமா?

அமைச்சர் தொண்டமானால் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கென பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப் பிக்கப்பட்ட யோசனைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

பௌத்த மதபீடங்கள் மற்றும் இனவாத சக்திகளிடம் இருந்து இதற்குப் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. காமினி ஜயசூரியவால் அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட 'அரசியல் நோக்கமற்ற' "சிங்கள பாதுகாப்பு சபை" தொண்டமானின் ஆலோசனைகள் பயங்கரவாதிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கான முதற்படி என அறிவித்துள்ள துடன் பரவலான எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தப் போவதாகவும் மிரட்டியுள்ளது.

யோசனைகளில் சொல்லப் பட்ட விடயங்களை ஆராயாமலே அவை தமிழர்கள் நாட்டைப் பிளவுபடுத்த உதவும் யோசனைகள் என்று யு. என். பி. மற்றும் எதிர்க்கட்சிகள் மத்தியில் முணுமுணுப்பு நடக்கிறது.

அரசதரப்பில் இதுவரை - குறிப்பாக ஜனாதிபதியிடமிருந்து - இந்த யோசனைகள் குறித்த எந்த அபிப்பிராயமும் வெளி வரவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொண்டமான் பேசப் போவதாகவும் அவருக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடக்கப் போவதாகவும் வெளிவரும் செய்திகள் பத்திரிகைகளில் - யாழ் பத்திரிகைகளிலும் கூட - முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆயுதப் படையினர் சமீபகால யுத்தங்களில் முன்னணியில் நிற்பதும், புலிகள் பின்வாங்கியுள்ளதும் சுட்டிக் காட்டப்பட்டு இது புலிகள் தம்மை தயார்படுத்திக் கொள்ள செய்யும் ஒரு நாடகமே ஒழிய அவர்கள் ஒருபோதும் பேச வரப் போவதில்லை என்று கொழும்பில் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் படு வதுடன் அரசாங்கம் இதைப் புரிந்து கொள்ள வேண்டுமென நிர்ப்பந்திக்கவும் படுகிறது.

இது, தொண்டமானை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோருமளவுக்கு முன்னேறியிருக்கிறது.

உண்மையில் தொண்டமான் அவர்களின் யோசனைகளில் அப்படி என்னதான் தெரிவிக்கப் பட்டிருக்கிறது ? இது வரை காலமும் வெளிவந்த கருத்துகள், எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் என்பவற்றை விட ஒருபடி மேலேபோய், புலிகளையும், தமிழ் மக்களது அபிலாசைகளையும் திருப்திப்படுத்தக் கூடிய சில விடயங்களை அது முன்வைத்துள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பு, குடியேற்றம், இராணுவ பொலிஸ்படை மற்றும் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு வெளிநாட்டுத் தொடர்பு என்பன இவற்றில் முக்கியமானவை.

ஆனால் உண்மையில் இவ்வளவு காலப் பிரச்சினையில் இருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான பாடத்தை அனைவரும் மறந்து விடுகிறார்கள். அதுதான், பிரச்சினை இன்றுவரை தீர்க்கப்படாதது இப்படி ஒரு ஆலோசனை முன்வைக்கப் படாததால் அல்ல. மாறாக, அப்படி ஒரு தீர்வை நடைமுறைப் படுத்த யாரும் விரும்பாததே. "எல்லாம் - ஈழம்" என்ற ஜனாதிபதி பிரேமதாச கூட இன்றுவரை பிரச்சினையை தீர்க்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆயுதப் படையைப் பலப் படுத்தியதை விட.

"சரிநிகர்" சொல்ல விரும்புவது இதுதான் பேச்சுவார்த்தை, தீர்வுக்கான ஆலோசனைகள் என்பன திரு. தொண்டமான் அவர்களது தனிப்பட்ட அரசியல் வாழ்வுக்கு அவர் தோட்டங்களை தனியார் மயமாக்குவதற்கு ஒத்துழைத்தது, இன்று பதுளை பசறைப் பக்கங்களில் நடக்கும் எழுந்தமானமான கைதுகளையிட்டு உருப்படியாக எதுவும் செய்யாமல் இருப்பது போன்றவற்றை மூடி மறைக்க இவை உதவக்கூடும். அரசுக்கும் தாம் மிகவும் அக்கறையாக இருப்பதாக காட்ட இது உதவக்கூடும். (பாராளுமன்ற தெரிவுக்குழு தெரிவிக்கப் போகிற ஆலோசனைகளையும் சரி வேறெவையும் சரி அரசுக்கு நல்ல பெயர் வாங்கித் தருவதற்கு மேல் வேறெதையும் செய்யப் போவதில்லை) விடுதலைப் புலிகளுக்கு சிறிதுகால அவகாசத்தை இவை வழங்கக் கூடும். ஆனால் இவை வேறெந்த நடைமுறை விளைவையும் உருவாக்கப் போவதில்லை.

அப்படியான நடைமுறை விளைவு துணிச்சலான பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிற போராட்டத்தை, பௌத்த சிங்கள பேரினவாதத்தை முறியடிக்கிற போராட்டத்தை நடத்தாமல் சாத்தியப்படப் போவதில்லை. ஆனால், அதிலேயே தமது அத்திவாரத்தை கொண்டிருக்கிற சிங்களக் கட்சிகள் இதை எப்படிச் செய்ய முடியும் ?

இத்தனைக்கும் தொண்டமான் அவர்களது ஆலோசனைகள் கூட தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முற்றுமுழுதான தீர்வை வழங்க முடியாத ஆலோசனைகளே. இனவாத அடிப்படையிலமைந்த அரசமைப்பின் கீழ் எந்த வகையான சமஷ்டி அமைப்பு முறைகளும் சிறுபான்ம இனங்களது பாதுகாப்பை உத்தரவாதம் செய்துவிட முடியாது. ஆனால், குறைந்தபட்சம் இதையாவது வழங்குவதற்கு எவ்வளவு தடைகள் ? எவ்வளவு எதிர்ப்புகள்.?

உருப்படியாக ஏதாவது செய்ய விரும்பினால், உடனடியாகச் செய்ய வேண்டியது யுத்தத்தை நிறுத்துவது. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது. தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் பொதுசன அப்பிராயத்தினை உருவாக்குவது. அதன் பிறகுதான் எதுவும் சாத்தியம். அல்லாவிட்டால் தொண்டமான் முதல் மங்கள முனசிங்க வரை யார் எதைச் சொன்னாலும், ஜனாதிபதி பிரேமதாச தலைகீழாக நின்றாலும் முடிவில் தீர்மானிக்கப் போவது "சிங்கள பௌத்தமே !"

நன்றி - நூலகத்திட்டம்



# பாரம்பரிய தாயகப் பிரச்சினையும் முஸ்லிம்களும்

சட்டத்தரணி யு.எம். நிஸார் B.A.

இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வில் முக்கியபங்கு வகிப்பது பாரம்பரிய தாயகப் பிரச்சினையாகும். வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி தமிழ் மக்களின் பிரிக்க முடியாத பாரம்பரிய பூமியாகும் என தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் பலமாக நம்புகின்றன.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரிய தாயகத்தில் முஸ்லிம், சிங்கள மக்களும் கணிசமானளவு வாழ்ந்தாலும் இவர்களின் சட்டரீதியான அந்தஸ்த்து எப்படியிருந்தபோதிலும் பொத்துவில் தொடக்கம் மன்னார் வரையிலான கரையோரப் பூமியானது தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு, பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒன்றிணைந்த ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் அரசியல் மற்றும் இராணுவக் குழுக்களின் அபிலாஷையாகும். இந்த அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நிகழும் பயங்கரமான யுத்தத்தில் அடிப்படையுமாகும்.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரியத் தாயகத்தில் தமிழர்கள் இன்றும் என்றும் கருதிவந்த தொடர்ச்சியான நிலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி, புனித பூமி பிரகடனம், புதைபொருள் ஆராய்ச்சி போன்ற பேரினவாத நடவடிக்கைகளை தமிழர்கள் மட்டுமல்ல வட, கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் பலமாக எதிர்க்கின்றனர். அம்பாறை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் திட்டமிட்ட அடிப்படையில் அந்நியர் குடியேற்றப்படுவதும் அபிவிருத்தி என்ற போர் வையில் மகாவலி 'சி' பகுதி மூலமாக அந்நியர்களுக்கு காணித்துண்டுகள் வழங்கப்படுவதும் சாதாரண ஒரு நடவடிக்கையல்ல, மாறாக வட, கிழக்கு பாரம்பரியப்பூமியின் சிங்களவர்களின் சனத்தொகையைக் கூட்டி அதில் வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் அரசியல் அதிகாரபலத்தை உடைத்து எதிர்காலத்தில் தமிழ் ஈழம் ஒன்று உருவாவதைத் தடுப்பதே பேரினவாத அரசின் நோக்கமென தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குரல் எழுப்புகின்ற நேரத்தில் முஸ்லிம்களோ குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் 'தமிழ்ஈழம்' உருவாவதைத் தடுப்பது அல்லது ஆதரிப்பதைத்தமது பிரதான இலக்காகக் கொள்ளாது தமது பொருளாதார அபிவிருத்திக்கும் எதிர்காலச் சந்ததிகள் குடியேறி வாழ்வதற்கும் தேவையான நிலப்பகுதிகள் அந்நியரால் ஆக்கிரமிக்கப்படுவதையும் அபகரிக்கப்படுவதையும் பலமாக எதிர்க்கின்றனர். ஆனால் துரதிஷ்டவசமான நிலை என்னவெனில், சிங்களக் குடியேற்றங்களுக்கெதிராக தமது பலமான எதிர்ப்பைக் காட்டுவதற்கு போதுமான அரசியல் உந்து சக்தி ஒன்று இல்லாமல் கடந்த நாற்பது வருடங்களாக அவர்கள் திணறுவதையே தற்கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

> "அண்மையில் முஸ்லிம்களுக்கெதிராக புலிகள் எடுத்துவரும் நடவடிக்கைகள் வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி **தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம்** என்றதற்கு முற்றிலும் முரணாக, முஸ்லிம்களைத் தவிர்ந்த தமிழை தாய்மொழியாகக் கொண்ட ஏனையோரது **பாரம்பரிய தமிழ் தாயகம்** என்ற கோட்பாட்டினை கொண்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது."

முஸ்லிம்களுக்கு தனித்துவமான தலைமைத்துவமும், உரிமைகளும் பெற்றுக் கொடுக்க வந்த தனி வழிக்கட்சிகள் கூட இந்தத் திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்ப்பதைத் தமது பிரதான இலக்காகக் கொள்ளாது. வேறு ஏதோ ஆதாயங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பது போல தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன

தமிழ், முஸ்லிம் சிறுபான்மைத் தேசிய இனங்கள் தமது அரசியல் அதிகாரங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கும், பாரம்பரிய கலாசாரங்களை கடைப்பிடிப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியடைவதற்கும் தனி அரசியல் அலகு (Seperate political unit) ஒன்று வேண்டுமென்றும் அதுவே வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலமெனவும் அடையாளப்படுத்தி வருகின்றன, ஆனால், அண்மைக் காலங்களில் எல்.ரி.ரி.ஈ. எடுத்த ஒரு சில நடவடிக்கைகளின்படி தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் வடக்கையும் கிழக்கையும் தமது வாழ்விடமாக பல நூற்றாண்டு காலமாகக் கருதி வாழ்ந்து வருவதாலும் இவ்விரண்டு சமூகங்களும் தமிழைத் தாய் மொழியாகக் கைக்கொண்டு வருவதாலும் வடக்கும் கிழக்கும் இணைந்த நிலப்பகுதி தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம் (Traditional Homeland) என்ற நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணாக வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களைத் தவிர தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஏனையோருக்கு மாத்திரமேயென்ற நிலைப்பாட்டை அதாவது வடக்கும் கிழக்கும் பாரம்பரியதமிழ் தாயகமென்ற (Traditional Tamil Homeland) உறுதியான கோட்பாட்டினைக் கொண்டுள்ளன.

> "வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களுக்கும் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற அடிப்படையில் தாயகம் என்பதை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் ஏற்க மறுக்கின்றன."

மிதவாத தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் பாரம்பரியத்தாயகமென்ற கோட்பாட்டில் வித்தியாசப்படாவிடினும் இவ்விரண்டு மாகாணங்களும் இணைந்த மாநிலமே எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் அடிப்படை அரசியல் அலகாகவும் (Basic Political Unit) அதன் அடிப்படையிலேயே மத்தியிலிருந்து அதற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் பிடிவாதமாக நிற்கின்றன.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலத்தில் முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல், கலாசார, பாரம்பரியங்களைப் பேணும் அலகுகளும் இருப்பதாகவும் அவை தமிழர்களின் பாரம்பரியத் தமிழ்த் தாயகத்தின் பகுதிகளாகாவென வாதிடுகின்றனர். மாறாகஅவை மத்தியிலிருந்து அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒரு முஸ்லிம் மாகாண சபையின் பிரிக்கமுடியாத பகுதிகள் எனக் காரணம் கூறுகின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் இலங்கையின் சனத்தொகையில் தமிழர்களின் சனத்தொகையில் நான்கில் மூன்று பங்கினராக இருக்கும் நிலையில் அவர்கள் எடுக்கும் எந்த முக்கியத்துவம் வாய்ந்த முடிவுக்கும் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற நான்கில் ஒரு பகுதி இலங்கைத் தமிழர்கள் முழு ஆதரவும் வழங்குகின்றனர். காரணம் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழர்கள் தமக்கு பாரம்பரியத்தாயகம் வடக்கும் கிழக்கும்தான் என நம்புவதாகும். எடுத்துக்காட்டாக கடந்த 83 ஜூலை கலவரத்தில் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி கப்பல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டனர். கொழும்பு 'செட்டி' வம்சத்தினர் கூட பல நூற்றாண்டுகள் கொழும்பில் வாசம் செய்தும் கூட இவர்களும் கூட யாழ்ப்பாணத்தை நோக்கி பாதுகாப்புக்காகச் சென்றனர்.

மலையகத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் தீர்க்கமான முடிவை எடுத்து விட்டன எனலாம். எப்படி வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலம் இலங்கையில் சிதறி வாழும் தமிழர்களுக்கு பாரம்பரியத்தாயகமோ அதேபோல் மலையகத் தமிழர்களுக்கும் அவர்கள் இந்திய வம்சாவழியாக இருந்தாலுஞ்சரி பதிவுப் பிரஜைகளாக இருந்தாலும்சரி அவர்களும் வடக்கிலும் கிழக்கிலும் காணிகள் பெற்று குடியேறலாம் என தமிழ் அரசியல், இராணுவக்குழுக்கள் அனுமதித்துள்ளன.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கு- கிழக்கு மாகாண சபை, தனது பதவிக்காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் மலையகத்தவர்களுக்கு காணிகள் வழங்கி, வீடுகளைக் கட்டி குடியேற்றியது.

முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில், வடக்கும் கிழக்கும் வடக்கிலும் கிழக்கிலும் வதிகின்ற முஸ்லிம்களுக்கு பாரம்பரிய பிரேதசமாகும். வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் செறிவாய் வாழுகின்ற பிரதேசங்கள் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களே என ஒரு சில மிதவாத தமிழ் இயக்கங்கள் கூட ஒத்துக்கொள்கின்றன.

ஆனால் வட-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கும் கிழக்கும் பாரம்பரிய பிரதேசங்களாக அதாவது இரண்டு பிரதேசங்களையும் தமது பாரம்பரிய தாயகமாக வெளியே வதிகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்கின்றனரா?

> "வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு,பாரம்பரிய கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்ற அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின் அடிப்படையாகும்."

இதுதான் இன்றைய முக்கியமான கேள்வியாகும் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசங்களாகக் கருதப்பட்டு வருகின்ற வடக்கும் கிழக்கும் தவிர்ந்த பிரதேசங்களை தாம் பிறந்து வாழும் பாரம்பரிய தாயகமாகக் கருதியே வாழ்ந்து வருகின்றது. 83 ஜுலையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை, இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டால் கூட, வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்ந்த நாலில் ஒரு பங்கு தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கையும் கிழக்கையும் நோக்கி புகலிடம் தேடிச் சென்றது போல வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழுகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கையும் கிழக்கையும் தேடிச் செல்லக் கூடிய மனோநிலையோ அவ்வாறு தேடிவரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடிய பிரதேசங்களாகவோ இன்று அவை இல்லை.

அது மட்டுமல்ல வடக்கும் கிழக்கும் தவிர்ந்த சிங்கள பாரம்பரிய பிரதேசம் அதில் வாழும் முஸ்லிம்களுக்கு ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்குவது போன்று வடக்கையும் கிழக்கையும் தமது பாரம்பரிய தாயகமாகக் கருதி வாழும் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு அவை ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்கக்கூடிய பிரதேசங்களாக இன்று இல்லை. வடக்கில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லிம்களும் கிழக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த ஒரு தொகை முஸ்லிம்களும் இன்று தமது பாரம்பரிய பிரேதசங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இன்று புகலிடம் வழங்கிக் கொண்டிருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசமாகும்.

இந்தப்பின்னணியில், தமிழ்மக்களிடையே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சபை உருவாக்கப்பட்டு அதற்கு மத்தியிலிருந்து கணிசமானளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எழும்பவில்லையே என ஒரு சில தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குறைகூறுகின்றன.

இந்நிலையில், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நூற்றுக்கு நூறுவீதம் முரண்படுகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு ஒருமைப்படான தீர்மானம் எடுக்க திண்டாடிக் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்க தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தவறிவிட்டன. இது பேரினவாதத்திற்கு பெரிய சாட்டாகப் போய்விட்டது.

வடக்கும் கிழக்கும் இணைந்தால் அது ஈழத்திற்கு ஒப்பாகும் என்ற பயம் சிங்களவர் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள வேளையில் முஸ்லிம் மாகாண சபையைப் பெறும் நோக்கில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் எனக் கருத்து தெரிவிப்பது சிங்களவர் மத்தியில் முஸ்லிம்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எவ்வளவுக்கு இழுபறியாகிறதோ அதேயளவுக்கு முஸ்லிம்கள்

→ பக்கம் 10இல்

நன்றி - நூலகத்திட்டம்



# முரட்டுப் பேரினவாதமும் அதன் குருட்டுத் தீர்வுகளும்

- பிரம்மா -

தொண்டமானின் உத்தேச யாழ்ப்பாணப் பயணமும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக தொண்டமான் முன்வைத்த யோசனைகளும் மிகத் தீவிரமான சிங்கள பௌத்த பேரினவாதப் புயலை மீண்டும் தெற்கில் உருவாக்கியுள்ளது. முரட்டுத் தனமான பேரினவாதமென்பது சிறிது சிறிதாக சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலிருந்து அகன்று வருகிறது என்று கூறவும், நம்பவும் முற்பட்ட கொழும்புவாழ் தமிழ்ப் புத்திமான்கள், பிரதிநிதிகள் முகத்தில் கடந்த இருமாதங்களில் உக்கிரமடைந்துள்ள சிங்கள இனவாதம் கடும்கரி பூசியுள்ளது.


முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியாவின் தலைமையில் சிங்கள இனப் பாதுகாவற் பேரணி உருவாக்கப்பட்டு அதற்கு மும்முரமாக ஆட்சேர்ப்பு நடைபெற்று வருகிறது. தமிழர்களுக்கு நாடு அடகு வைக்கப்படுவதற்கான முன்முயற்சியே தொண்டமானின் யோசனைகள் என்றும் தமிழர்களுக்கு வடக்கில் எவ்விதமான சுயாட்சியும் வழங்கப்படல் கூடாதெனவும், அங்ஙனம் வழங்கப்பட்டால் சிங்கள இனம் விரைவில் அடிமைகளாக நேரிடும் என்றும் சிங்கள இனப் பாதுகாவற் பேரணியின் பிரமுகர்கள் 'திவயின' போன்ற நாளேடுகளுக்கு பேட்டியளித்துள்ளனர்.

எண்பதுகளின் பிற்பகுதியில் பிரபலமடைந்த 'ஜாதிக சிந்தனய' எனும் சிங்கள இனவாதக் கோட்பாட்டின் பிதாமகரான குணதாச அமரசேகர என்பார் 'லங்காதீப' பத்திரிகைக்கு அண்மையில் அளித்த பேட்டியில் "புலிகளின் பிரச்சினை என்பது ஒரு இனப் பிரச்சினையே அல்ல அது இனவாதத் தமிழ் ஏகாதிபத்தியத்தின் படையெடுப்பேயாம் என்றும் "சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு, மற்றும் அரசியற் கட்சி முன்னணிகள் ஆகியவை இனப்பிரச்சினையைத் தீர்க்கவென, உருவாக்கப்படுவதிலிருந்து ஒன்றுமட்டும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அது என்னவெனில் சிங்கள மக்களுக்கு துரோகம் புரிய அனைவரையும் ஈடுபடுத்துகின்ற முயற்சியேயாம்" என்றும் கூறியுள்ளார்.

அதாவது இனப்பிரச்சினை என்பதொன்று இந்நாட்டில் இல்லை, அது உண்மையில் தமிழ் ஏகாதிபத்தியப் படையெடுப்பொன்றுக்கான போர்வையே என்றும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் சிங்கள இனத்திற்கு இழைக்கப்படும் துரோகம் என்றும் இன்று சிங்களப் பேரினவாதம் கூக்குரலிடுகின்றது, அதைச் சிங்கள, ஆங்கில நாளேடுகள் மிகக் கரிசனையோடு பிரச்சாரப்படுத்துகின்றன.

சிங்களத் தேசியச் சித்தாந்தத்தின் இன்னொரு தீவிரப் பிரசாரகரான கலாநிதி நளின் டி சில்வா (கொழும்பு பல்கலைக்கழக கணிதத்துறை விரிவுரையாளர்) அவர்கள் 'திவயின' நாளேட்டில் சில வாரங்களுக்கு முன் (டிசெ 25,27) இரு கட்டங்களாக வெளியிட்ட கட்டுரையொன்றில் கூறியுள்ள கருத்துக்ககள் இன்று சிங்களப் பகுதிகளில் மேலோங்கக் கூடிய சில கருத்துக்களை வெள்ளிடை மலையெனப் புலப்படுத்துகின்றன. அவர் கூறுகிறார் "புலிகள் மட்டுமல்ல ஏனைய தமிழர் இயக்கங்களும், இலங்கையில் சரித்திர காலத்திலிருந்து இரு இனங்கள் இருந்ததாக நம்புகின்றன. பல சரித்திரவியலாளர்கள் இத்தமிழ்க் கட்சிகளின் இக்கருத்து தவறானது என பல வரலாற்று மற்றும் பிற சான்றுகளோடு நிறுவியுள்ளனர். இலங்கையில் ஆயிரமாயிரம் வருடங்களாக இரு இனங்கள் இருக்கவில்லை. சிங்கள இனம் மட்டுமே இலங்கையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட வருடங்களாக வாழ்ந்து வருகின்றது, அவர்களுக்கு மட்டுமே தொடர்ச்சியான பாரம்பரியக் கலாசாரம் ஒன்றுள்ளது. கோல்புறு- கமரோன் ஆணைக்குழு, (ஆங்கிலேய அரசு இலங்கையின் அரசவாக்கம் தொடர்பாக நியமித்தது) தமிழர் எனும் இனக்குழு (Ethnic group) ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றே என்பதற்குச் சான்று பகர்கிறது.

ஒருமக்கட் கூட்டம் தேசிய இனமாக வேண்டுமெனில் அவர்களுக்குப் பொதுவான தொடர்ச்சியான பண்பாடு வேண்டும், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு அவர்களது வாழ் இடமாதல் வேண்டும், குறிப்பிட்ட உற்பத்தி உறவுகள் இருக்க வேண்டும். பந்துகாபய மன்னன் காலத்திலிருந்தாவது இலங்கையில் சிங்களவர் வாழ்ந்து வந்துள்ளனர். வேறு பல இனங்களும் அவர்கள் மத்தியில் வாழ்ந்து வந்தனர். ஆனால் அவ்வினங்கள் ஓரிரு தலைமுறைகளில் சிங்களவர்களாகி விட்டனர். (அமெரிக்காவிற்கு இன்று குடியேறச் செல்லும் சிங்களவர்கள் ஒரு தனி இனமாக அங்கு கருதப்பட முடியாது. இன்னும் ஓரிரு தலைமுறைகளில் அவர்கள் அமெரிக்கர்களாகி விடுவர். சிங்களக் கலாசாரம் அமெரிக்காவில் ஒரு தொடர் மரபினை உடைய பாரம்பரியக் கலாசாரமாகி விடமுடியாது. அது அங்கு ஒரு வந்தேறு கலாசாரமாகவே இருக்க முடியும். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது யாழ்ப்பாண இராச்சியம் என்றொன்று இருந்ததா? அதன் உற்பத்தி முறைதான் என்ன? இவற்றிற்கான தெளிவான பதிலை தமிழ் இனவாதிகளால் முன்வைக்க முடியுமா? தற்போதைய தமிழ் இனமும் அதன் தமிழ்த் தேசிய உணர்வும் இருநூறு வருடங்களுக்கு முற்பட்டவையல்ல. எமது சனத்தொகையின், மலபாரிகள் என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட இப்பிரிவு கடந்த நூற்றைம்பது வருடங்களில்தான் ஒரு இனமாகத் தலைப்பட்டுள்ளது. இந்த இனக்குழு (தமிழர்) ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்



பட்டதேயாகும். இன்று வாழும் தமிழருக்கும் எல்லாள மன்னனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது, அதே வேளை துட்டகைமுனு மன்னனுக்கும் தற்காலச் சிங்கள மன்னனுக்கும் மிகவலுவான ஒரு தொடர்புண்டு. எல்லாள மன்னனோடு வந்த தமிழர்களின் சந்ததிகள் சிங்களவர்களாகி பல்லாண்டுகளாகி விட்டன.

தமிழர்க்கென ஒரு பாரம்பரியப் பிரதேசம் உண்டென்பதும் முற்றிலும் தவறான ஒரு கூற்றாகும். கிழக்கு மாகாணத்தில் ஒரு காலத்தில் பெரும்பான்மையாகவிருந்த சிங்களவர் வெலெஸ்ஸ கிளர்ச்சியின் பின்னர் ஆங்கிலேயர்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஆங்கிலேயரின் அனுசரணையுடன் கிழக்கில் தமிழர் குடியேறினர். கிழக்கின் சில நகரங்களிலேயே தமிழர் வசிக்கின்றனர். கிழக்கின் சிங்களச் சனத்தொகை குறைவடைய இதுவே காரணமாகும். தமிழர்களுக்கு இலங்கையில் பாரம்பரியப் பிரதேசம் ஒன்றில்லை என்பது இதிலிருந்து தெளிவாகப் புலப்படும். வடகிழக்கானது தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமென்போர் தமிழ் இனவாதிகளே யாவர்.

தமிழர்களுடைய கலாசாரம் ஒரு வந்தேறு கலாசாரமாகவே (Migrant Culture) கடந்த காலத்தில் இருந்துள்ளது என்பதைச் சிலர் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளனர். வேறு சில புத்திஜீவிகள் புலிகளை முறியடிப்பதானால் ஏனைய தமிழ் இயக்கங்களின் கோரிக்கைகளை வழங்க வேண்டும் எனக் கூறுகின்றனர். புலிகள் என்றால் என்ன ஏனைய இயக்கங்கள் என்றால் என்ன அவர்களைப் பொறுத்தவரை தமிழரின் பாரம்பரியத்தாயகம் என்பதில் மாற்றமில்லை. ஆகவே புலிகளை முறியடிக்க உதவுகிறோம். என்று கூறிக் கொண்டு கோரிக்கைகளை முன்வைக்கும் ஏனைய தமிழ் இயக்கங்கள் பற்றி நாம் மிக விழிப்புடன் இருக்க வேண்டும்."

கலாநிதி நளின் டி சில்வாவின் இக்கருத்துகள் இன்று மிகப் பிரபலமடைந்து வருகின்றன. அரசிற்கெதிராக வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள அனைத்துச் சக்திகளும் இக்கருத்துக்கள் உருவாக்கும் இனவாத அலையில் இலகுவாக வெற்றியை நோக்கி சவாரி செய்யலாம் என எண்ணுகின்றன.

தொண்டமானின் முயற்சியை காரணமாக வைத்துக் கொண்டு இன்று வீசும் முரட்டுச் சிங்களப் பேரினவாதத்தின் மையக் கருத்து எது ? தமிழர் ஒரு வந்தேறு கலாசாரத்தினையுடையவர்கள். வரலாற்றுக் காலத்திலிருந்து அக்கலாசாரமானது இந்நாட்டின் ஒரேயொரு தொடர்ச்சியான பாரம்பரியக் கலாசாரமான சிங்களக் கலாசாரத்துடன் காலப்போக்கில் சங்கமமாகி இரண்டறக் கலந்துள்ளது. புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு, ஏனைய இயக்கங்களும் ஒடுக்கப்பட்டால் மீண்டும் வரலாற்றுக் காலங்களில் நடைபெற்றமை போல - எல்லாளனின் சந்ததிகளுக்கு நடந்ததாகக் கூறப்படுவதுபோல தமிழரின் வந்தேறு கலாசாரமானது காலப் போக்கில் சிங்கள மயமாகிப் போவதற்கு எவ்வித முட்டுக் கட்டைகளும் இருக்கமாட்டாது என்பதே இன்று சிங்களப் பாதுகாப்புப்பேரணி, மற்றும் கலாநிதி நளின் டி சில்வா, குணதாச அமரசேகர போன்றோரும் பிரபலப் படுத்தியுள்ள சிந்தனையின் அடிநாதமாகும்.

இங்கு நோக்கப்பட வேண்டியது யாதெனில் இன்று பௌத்த பீடங்களையும், இராணுவத்தையும் இக்கருத்துகளே ஆட்கொண்டுள்ளன. தெற்கின் எதிர்கட்சிகள் இக்கருத்துகளை வெளிப்படையாக ஆதரிக்கின்றன அல்லது மௌனம் சாதிப்பதன் மூலமும் இரகசியத்தூதுகள் மூலமும் இக்கருத்தாளர்களின் ஆதரவைத் திரட்ட முற்படுகின்றன. அரச சார்பற்ற பிரபல பத்திரிகைகள் பல இச்சிங்களப் பேரினவாதக் கருத்தாளர்களின் பேட்டிகளுக்கும், கட்டுரைகளுக்கும் அதி முக்கியத்துவம் கொடுத்து பரபரப்பாக வெளியிடுகின்றன.

இதில் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விடயம் யாதெனில் இன்று தமிழர்கட்கு உரிமை வழங்குவதை எதிர்த்தும் புலிகள் அழிந்தால் தமிழரைச் சிங்கள மயமாக்கி விடலாம் என்றும் கூச்சலிடும் முரட்டுப் பேரினவாதத்தின் பிதாமகர்கள் அனைவரும் இந்தியாவை நட்புடன் நோக்குகின்றனர். இந்தியாவிற்கும் (ஆரிய வட இந்தியா) சிங்கள இனத்திற்கும் தமிழ்ச் தேசியவாதம் பொது எதிரி. ஆகவே இந்திய உதவியுடன் அரசும் படைகளும் தமிழ்த் தேசிய உரிமையை நசுக்க வேண்டும் எனவும் அவர்கள் இன்று கூறுகின்றனர். இந்திய அதிகாரிகளும் இப்போக்கினை பல்வேறு மறைமுக வழிகளில் உற்சாகப்படுத்துவதாகத் தென்படுகிறது. இந்த இனவாதப் புயலினால் பாதிக்கப்படப் போகிறவர்கள் அரசை சார்ந்துள்ள தமிழ் இயக்கங்களே. தமிழர் சிங்களமயமாக வேண்டும் என்ற கோட்பாட்டினை ஏற்றுதானோ என்னவோ இன்று இராணுவத்தை முற்றாகச் சார்ந்துள்ள ஒரு இயக்கம் வடகிழக்கு இணைப்பைப் பற்றி மூச்சு விடாமல் காலத்தை ஓட்டுகிறது. இந்த இனவாத அலையோடு அடிபட்டுப் போகாமல் பிரேமதாச அரசைச் சார்ந்துள்ள ஒரு சிலர் துணிச்சலுடன் அரச சார்புப் பத்திரிகைகளில் துணிந்து முன்வைக்கும் கருத்துகள் குறிப்பிடப்பட வேண்டியவையாகும். எனினும் பிரேமதாசவும் ஒரு சிலரும் பௌத்த பீடங்கள், இராணுவம், அரசியலில் இறங்கியுள்ள சர்வோதயம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து வரக்கூடிய பேரினவாதப் புயலையும் தமிழர் சிங்கள மயமாக வேண்டுமென்ற கோட்பாட்டையும் இவற்றின் பின்புறத்தில் இந்தியாவின் செயற்பாடுகளையும் எத்தனை நாட்கள் எதிர்க்க முடியும் என்பது கேள்விக்குரியது. சிங்களப் பேரினவாத வெறியர்கள் தமிழ் மக்களின் (வந்தேறு) பண்பாடு சிங்களக் கலாசாரத்துடன் சங்கமிக்க வேண்டுமென ஓலமிடும் வேளை தமிழரின் உண்மைப் பண்பாட்டின் கருவூலமான பாடலொன்று கூறும் கருத்தே தமிழர் மனதில் வலுப்பெறுவது தவிர்க்க முடியாதது.

"குழவி இறப்பினும் ஊன்தடி
பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின்
தப்பார்
தொடர்படு ஞமலியின் இடர்
படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீ
தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரே இவ்வுலகத்தானே"
(புறநானூறு 74)

(குழந்தை இறப்பினும், தசைப்பிண்டம் பிறப்பினும் வாளால் வெட்டி வீர அடக்கம் செய்யும் மரபினை உடையவர்கள். மன வலியின்றி கட்டுண்டு இழுக்கப்படும் நாய் - ஞமலி - போல் வயிற்றின் தீ தணிய இரந்து உண்ணுகின்ற வாரிசுகளை பெற்றெடுப்பாரோ) ●

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு மீளாய்வை நோக்கி...

சென்ற இதழில் தமிழ் இளைஞர் பேரவையின் தோற்றம், வளர்ச்சி, அது நடாத்திய போராட்டங்கள், குறிப்பாக 50 நாள் உண்ணாவிரதப் போராட்டம் என்பன பற்றிப் பார்த்தோம். இறுதியாக யாழ் பல்கலைக்கழகத் திறப்பு விழாவின்போது வருகை தந்த பிரதமரைப் பகிஷ்கரித்து நடாத்திய போராட்டத்தை பற்றியும் அப்போராட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவையினருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதம் பற்றியும் பார்த்தோம்.

பிரதமரைப் பகிஷ்கரித்து நடாத்திய போராட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தடுக்க முற்பட்டதோடு அவர்களின் சுயரூபத்தை தமிழ் இளைஞர் பேரவையின் தலைமைப் பீடத்தில் இருந்தவர்கள் உணர்ந்து கொண்டார்கள். தங்களை மீறி ஒரு சக்தி வளர்வதை கூட்டணியினர் விரும்பவில்லை என்பதையும் தங்களை கூட்டணியின் ஒரு வாலிப முன்னணியாகவே வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பதையும் உணர்ந்துகொண்டார்கள். கட்சி சார்பில்லாமல் தனித்துவமான ஓர் அமைப்பாக தமிழ் இளைஞர் பேரவையை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்ற தமது ஆரம்பக் குறிக்கோள் சிதைவடைந்து வருவதையும் உணர்ந்து கொண்டார்கள். நிதியுதவிக்காக அவர்கள் மீது சார்ந்திருந்த நிலைமை அமைப்பையே அவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதை உணர்ந்தார்கள். இதனைத் தடுக்குமுகமாக தமிழ் இளைஞர் பேரவையை முற்றாகவே தமிழர் கூட்டணியிலிருந்து பிரித்து தனித்துவமான ஓர் அமைப்பாக மாற்றும் முயற்சியிலீடுபட்டார்கள். இதற்காக அமைப்பின் முன்னணி உறுப்பினர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்தவும் முயற்சி செய்தார்கள்.

தமிழ் இளைஞர் பேரவையின் தலைமை உறுப்பினர்கள் இம்முயற்சிகளை மேற்கொண்டிருந்த அதேவேளை கூட்டணியினர் இதற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தனர். தம்மோடு முரண்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர் பேரவையின் முன்னணித் தலைவர்களை அமைப்பிலிருந்து நீக்கி அமைப்பை தமது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைந்தனர் ஏற்கனவே தமது எடுபிடிகள் பலர் தமிழ் இளைஞர் பேரவைக்குள் இருந்தபடியினால் அவர்களைச் சாதகமாக நகர்த்தி அதனை மேற்கொள்ள முனைந்தனர். அக்கால கட்டத்தில் கவர்ச்சிப் பாவைகளாக விளங்கிய காசி ஆனந்தனையும், மாவை சேனாதிராஜாவையும் இதற்குப் பயன்படுத்தினர். காசி ஆனந்தனிடம் கூடுதலான தேசிய உணர்வும், போராட்ட உணர்வும் இருந்தமையினால் தொடர்ச்சியாக அவரைப் பயன்படுத்த முடியவில்லை. மாவை சேனாதிராஜாவையே கூடுதலாகப் பயன்படுத்தினர். தமிழ் இளைஞர் பேரவையின் ஒவ்வொரு கட்டத்திலும் மாவை சேனாதிராஜாவே கருங்காலியாக நின்று அமைப்பைச் சிதறடித்தார்.

கூட்டணியினர் இம்முயற்சிகளை இரவோடு இரவாக மேற்கொண்டனர். தமது கெடுபிடிகளைக் கொண்டு அரசியலறிவையும், உண்மை நிகழ்வையும் அறிந்திராத பல புதிய இளைஞர்களை 1975இன் நடுப்பகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீட்டில் கூட்டினர். அக்கூட்டத்தில் தாம் தான் தமிழ் இளைஞர் பேரவையினர்; இதனைச் சிலர் தவறான வழிகளில் கொண்டு செல்கின்றனர். எனவே தாம் இதனைப் புனரமைப்புச் செய்யப் போவதாகக் கூறினர். தமிழ் இளைஞர் பேரவை தனித்துவமான அமைப்பல்ல; அது கூட்டணியின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்பு என்றும் கூறினர். தமிழ் இளைஞர் பேரவையின் புதிய தலைவராக காசி ஆனந்தனையும், புதிய செயலாளராக மாவை சேனாதிராஜாவையும் தெரிவு செய்தனர். சந்ததியார் தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பாளராக்கப்பட்டார். இறைகுமாரன், உமைகுமாரன், உமா மகேஸ்வரன், ரகு சிறிபாலா, சிறீதரன் ஆகியோர் முன்னணி உறுப்பினர்களாக்கப்பட்டனர். உண்மையில், இக்கூட்டத்திற்கு தமிழ் இளைஞர் பேரவையின் முன்னணி உறுப்பினர்களாக இருந்த புஷ்பராஜா, வரதராஜா, சந்திரமோகன் என்போருக்கு அழைப்பெதுவும் விடுக்கப்படவில்லை.

தமிழ் இளைஞர் பேரவையின் முன்னணி உறுப்பினர்கள் இவ்வளவு விரைவாக கூட்டணியினர் கழுத்தறுக்கும் வேலைகளில் ஈடுபடுவர் என எதிர்பார்க்கவில்லை. அத்தோடு தங்களை பதவி வெறிபிடித்தவர்கள், பதவிக்காக அலைபவர்கள் எனப் பிரச்சாரம் செய்வதையிட்டும் அவர்கள் பெரிதும் கவலையடைந்தனர். தாம் வளர்த்தெடுத்த இளைஞர்களையே தவறான கருத்துக்களை கூறி கூட்டணியினர் தமக்கெதிராகத் திருப்பிவிடுவதையிட்டும் அதிர்ச்சியடைந்தனர். இந்நிலையில் அமைப்பிற்கு மீண்டும் தாங்கள் உரிமை கோருவதா அல்லது புதிய அமைப்பை உருவாக்குவதா? என்பது அவர்களுக்குப் பிரச்சினையாக இருந்தது. அமைப்புக்கு உரிமை கோருவதாயின் தாம் வளர்த்த இளைஞர்களுடன் மோத வேண்டிய நிலை ஏற்படும். அம் மோதல் கைகலப்பாக மாறக்கூடிய சூழ்நிலை கூட அன்று இருந்தது. அதனை அங்கீகரிப்பதா? அல்லது எங்களுக்குப் பெயர் முக்கியமில்லை, மக்களுடைய விடுதலைதான் முக்கியம் எனக் கருதி புதிய அமைப்பை உருவாக்குவதா? எனச் சிந்தித்தனர். இறுதியில் எங்களுக்குப் பெயர் முக்கியமில்லை, மக்களுடைய விடுதலைதான் முக்கியம் எனக் கருதி புதிய அமைப்பை உருவாக்குவது எனத் தீர்மானித்தார்கள். இத் தீர்மானத்தினடிப்படையில் 1975 இன் பிற்பகுதியில் தமிழர் ஈழ விடுதலை இயக்கம் எனும் அமைப்பை உருவாக்கினார்கள். (இத் தமிழீழ விடுதலை இயக்கம் என்பது தற்போதுள்ள ரெலோ அல்ல. இப் பெயரை தமிழீழ விடுதலை இயக்கம் சிதைந்த பின் அதன் தலைவர்களிலொருவராக இருந்த முத்துக்குமாரசுவாமியிடமிருந்து ரெலோ இயக்கத் தலைவர்களிலொருவராக விளங்கிய தங்கததுரை இரவல் வாங்கிப் பயன்படுத்தினார். இதன் வரலாற்றைப் பின்னர் பார்ப்போம்.)

தமிழ் இளைஞர் பேரவையின் முதற்கட்ட சிதைவிற்கும் த.வி. கூட்டணியினர் இலகுவாக அவ்வமைப்பைக் கைப்பற்றுதற்குமான காரணங்கள் பல. தமிழ் இளைஞர் பேரவைக்கு இறுக்கமான அமைப்பு வடிவம் இல்லாமை, உறுப்பினர்களைக் கருத்துரீதியாக வளர்த்தெடுக்காமை, கூட்டணியுடனான உறவுகளைக் கையாளும்போது போதிய கவனமெடுக்காமை, அமைப்பின் வளர்ச்சிக்கும் பொருளாதார உதவிக்கும் மக்களைச் சார்ந்திராது கூட்டணியினரைச் சார்ந்திருக்க முற்பட்டமை, கூட்டணியினரை வர்க்க ரீதியாகப் பார்க்கத் தவறியமை என்பவை அவற்றில் முக்கியமானவையாகும்.

தமிழ் இளைஞர் பேரவைக்கு ஓர் இறுக்கமான அமைப்பு வடிவம் என்பது இருக்கவில்லை. உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பில் எந்தவித கட்டுப்பாடுகளோ விதிகளோ இருக்கவில்லை. உணர்ச்சி அலையில் வந்த இளைஞர்கள் எல்லோரும் மேலெழுந்தவாரியாகச் சேர்க்கப்பட்டனர். தொகுதி அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கூட எவ்விதி பரிசீலனைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அரசியல் ரீதியாகத் தெளிவில்லாதவர்கள் கூட்டணியினரின் எடுபிடிகள் எல்லாம் அமைப்புக்குள் வர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ் எடுபிடிகளையும் அரசியல் தெளிவில்லாதவர்களையும், கவர்ச்சிப் பாவைகளான காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா என்போரையும் வைத்து அமைப்பைக் கூட்டணியினர் கைப்பற்றியபோதுகூட இவர்கள் அதற்கெதிரான போராட்டங்களை நடாத்தியிருக்கலாம். அதனைக் கூட இவர்கள் நடாத்தவில்லை. கூட்டணியினரை அம்பலப்படுத்தும் வேலைகள் எவற்றையும் முன்னர் அவர்கள் மேற்கொள்ளாமல் திடீரென கூட்டணி அலை வளர்ந்திருந்த வேளை நடாத்துவது அவர்களுக்குக் கடினமாக இருந்தது. அதைவிட ஓர் அமைப்பின் பெயரின் முக்கியத்தும் தொடர்பிலும் இவர்கள் பெரிதும் அக்கறை கொள்ளவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் மத்தியில் கவர்ச்சிக்காரராக விளங்கிய சிறையிலிருந்து வெளிவந்த காசி ஆனந்தனையும், சேனாதிராஜாவையும் இவர்களுக்கெதிராகக் கூட்டணியினர் பயன்படுத்தியபோது இவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

அன்னபூரணா

இளைஞர் பேரவைக்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதில் இருந்த கவனம் அவர்களை அரசியல் ரீதியாக வளர்த்தெடுப்பதில் இருக்கவில்லை. இதனால் உறுப்பினர்கள் வெறும் உணர்ச்சி அலைகள் நிரம்பப்பெற்றவர்களாக இருந்தார்களே தவிர கருத்து ரீதியாக வளர்ச்சி பெற்றவர்களாக இருக்கவில்லை. அவர்களை வளர்த்தெடுப்பதற்கான படிமுறை வேலைத்திட்டமும் அவர்களிடம் இருக்கவில்லை. ஏதாவது போராட்டங்களுக்கு அவர்களை அழைப்பதும், போராட்டம் முடிந்ததும் அவர்கள்மீது கவனம் செலுத்தாமல் விடுவதுமே ஒரு போக்காகக் காணப்பட்டது. உறுப்பினர்களை அரசியல் ரீதியாக வளர்த்தெடுப்பதற்கு முன்னர் முன்னணியில் நின்றவர்கள் தாம் வளர்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்களோ என்றால் அதுவும் நடக்கவில்லை. எப்போதும் ஓர் அரசியலமைப்பைப் பொறுத்தவரை அதற்கென ஓர் அரசியல் வழி இருக்க வேண்டும், அவ் வேலைத்திட்டங்களின்படி முதலில் முன்னணியினரிடம் பிரச்சாரம் செய்து பின்னர் பரந்துபட்ட மக்களிடம் பிரச்சாரம் செய்கின்ற ஓர் படிமுறையான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். இவையெதுவும் இளைஞர் பேரவையிடம் இருக்கவில்லை. உண்மையில் அது தொடர்பான பயிற்சிகளை எடுப்பதற்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு இருக்கவில்லை. இளைஞர் பேரவையில் அணிதிரண்ட இளைஞர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியினரது பிரச்சார அலைகளால் அள்ளுப்பட்டுக் கொண்டு வரப்பட்ட அவர்களின் பழைய ஆதரவாளர்களாகவே இருந்தனர். தமிழரசுக் கட்சியினரிடம் அமைப்பு தொடர்பான கொள்கை வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லாதபடியினால் அவர்களிடமிருந்தும் பயிற்சிகளை இவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதைவிட மாக்சிய அரசியலில் சிறிதளவு அனுபவம் இருந்தால்கூட அப்பயிற்சி கிடைத்திருக்க வேண்டும். அவ்வனுபவமும் இருக்கவில்லை. இதனால் எல்லாவற்றையும் புதிதாகப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவே இவர்கள் இருந்தனர். நடைமுறை அனுபவங்களினூடாகவே இவர்கள் அரசியலைக் கற்க முனைந்தனர். ஒவ்வோர் நடைமுறைப் பிரச்சினைகளும் வரும்போதே இது ஏன் நடக்கிறது என ஆராய முற்பட்டனர். அந் நடைமுறை அனுபவத்திலிருந்தே முடிவுகளையும் எடுத்தனர்.

சிதைவின் இன்னோர் முக்கிய காரணி கூட்டணியுடனான உறவுகளைக் கையாளும்போது கவனமாக இருக்காமையாகும். த.இ.பேரவையை ஆரம்பித்தபோது அரசியல் கட்சி சார்பற்ற வகையில் தனித்துவமான ஓர் அமைப்பாகவே கட்டி எழுப்ப வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டே ஆரம்பித்தனர். தமிழரசுக் கட்சியின் காரியாலயங்க்ளிலேயே தமது கூட்டங்களை நடாத்தினர். தமிழரசுக் கட்சியினரின் பிரச்சாரக் கூட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டு உரையாற்றினர். தங்களது போராட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் கௌரவ விருந்தினர்களாக அழைத்தனர். குறிப்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகையில் தம்மைப் பற்றிப் பிரசாரம் செய்ய இடமளித்தனர். இந்நிலைமைகளாற் தமிழரசுக் கட்சியினரும் பின்னர் தமிழர் கூட்டணியினரும், இளைஞர் பேரவைக்குள் ஊடுருவுவதற்கும் தங்கள் கெடுபிடிகளை அனுப்புவதற்கும் வாய்ப்பாக இருந்தோடு மக்கள் மத்தியில் கூட்டணியின் ஓர் இளைஞர் அமைப்புத்தான் தமிழ் இளைஞர் பேரவை என்ற மாயையை வளர்ப்பதற்கும் உதவி செய்தது. இந்நிலைமைகளை உணர்ந்து இவர்கள் விழித்தபோது அமைப்பு இவர்களின் கைகளில் இருந்து பறிபோகின்ற நிலையில் காணப்பட்டது.

∴ ∴ ∴

நன்றி - நூலகத்திட்டம்



# மாற்றுக் கலாசாரத்திற்கான தேடலும் விபவி என்கிற கலாசாரக் குழுவும்

இலங்கை பல்லின, பல மத, பல கலாசாரங்களைக் கொண்ட ஒரு நாடு. இன்று இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். (அவ்வப்போது ஜனாதிபதி அவர்களுக்கும் தனது மற்றைய இனங்கள் மீதான "அக்கறையை" வெளிப்படுத்த இந்தப் பல்லின, பல கலாசாரம் மேடையில் பேசுபொருளாகி விடுவதுண்டு.) தெரியாத விடயம் இந்தப் பல்லினத் தன்மையை எவ்வாறு பேணுவதென்பது ? அவற்றிற்கான கலாசாரப் பண்புகளை அவ்வவ் இனத் தனித்துவத்தின் அடிப் படையில் எவ்வாறு வளர்த்துச் செல்வதென்பது ? இவ்வாறான ஒரு படிமுறையூடாக பல்லினக் கூறு கொண்ட இலங்கைக்கான கலாசாரத்தை நோக்கி எவ்வாறு முன் செல்வதென்பது ?

இந்தக் கேள்விக்கான பதிலை ஓரிரு வரிகளில் சொல்லிச் செல்வது இயலாத காரியம் என்பது மட்டுமல்ல இந்தப் பதில்களுக்கான பின்னணியானது நேரடி அரசியல் தொடர்புடையது என்கிற முக்கியமான விடயத்தையும் கவனத்திற் கொண்டாக வேண்டியுள்ளது.

இலங்கை சுதந்திர மடைந்ததாகக் கூறப்பட்ட இந்த நாற்பத்தியிரண்டு ஆண்டு கால இலங்கை வரலாற்றிலும் பௌத்த சிங்கள தேசியவாதமே ஆட்சியுற்றிருந்தது. இன்னும் சொல்லப் போனால் இலங்கைக்கான தேசியம் என்பது பௌத்த சிங்கள தேசியவாதமாகவே இருந்து வந்தது; இருந்து வருகிறது. இற்றைவரையிலும் இந்தப் பல்லினத் தன்மை இவர்களால் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதுதவிர இந்த நாற்பத்தி யிரண்டு வருட காலப்பகுதியிலும் நடந்தது என்னவென்றால், மற்றைய சிறுபான்மை இனங்களையும் அவர்களது காலாசாரத் தனித்துவங்களையும் புறக்கணித்தது மட்டுமன்றி, அவர்களை வந்தேறு குடிகளாகவும், சிங்கள மக்களது உரிமைகளையும், வாய்ப்புகளையும் பறிக்க முனைபவர்களாகவும் சித்திரித்து அவர்களுக்கெதிரான வன்முறைகளையும், காலாசார அழிப்புகளையும் ஊக்குவித்தது தான்.

1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்திலிருந்து அவ்வப்போது தமிழ் மக்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட இனக் கலவரங்களிலிருந்து இன்றைய வட-கிழக்கு யுத்தம் வரை இதற்குள் அடங்கும்.

இன்னும் கூட "ஜாதிக சிந்தனய" என்கிற பச்சையான ஒரு இனவாதக் கோட்பாட்டி னடிப்படையில் இக்கோட்பாட்டின் பிதாமகர்களான கலாநிதி நளின் டி சில்வா அவர்களும், குணதாச அமரசேகர அவர்களும் இவ்வாறான ஒரு கைங்கரியத்தை முன்நின்று நடாத்துகிறார்கள்.

அதாவது இலங்கையில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் ஒரே ஒரு இனம் சிங்கள இனம், மற்றையவர்கள் எல்லாம் மிக மிக அண்மைக் காலத்தில் வந்த வந்தேறு குடிகள். எந்தக் காலத்திலும் தமிழர்க்கென நிலமோ அரசோ இருக்கவில்லை என்பது இவர்களது வாதம். இதற்கு ஆதாரமாக நயினாதீவிலிருந்து வல்லிபுரத் தகடு வரை வரலாற்றைத் திரித்த நிறைய விடயங்களைப் பயன் படுத்துகிறார்கள் இவர்கள்.

தொண்டமானின் பேச்சு வார்த்தை விவகாரம் கொஞ்சம் அயர்ந்திருந்த இந்த இனவாத பூதத்தை அதன் கோரமான பற்களுடன் காமினி ஜயசூரியாக்களாகவும் பௌத்த மத தேரோக்களாகவும் உசுப்பி விட்டுள்ளது.

பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்வதென்பது சிங்களவர் களையும், பௌத்தர்களையும் அழிவில் கொண்டு போய் விட்டுவிடும் என்பதாக ஒப்பாரி வைக்கிறார்கள். இவை ஒரு புறத்தில்.

இன்னொரு புறத்தில் வளர்ந்து வரும் புறச்சூழலானது பல்லினத் தன்மை பற்றிச் பேச வேண்டிய நிலைக்கு அதிகாரத்தி லிருப்பவர்களைக் கொண்டு வந்து தள்ளிவிட்டுள்ளது. இவ்வாறான ஒரு நிலைமையிற் தான் அரசும், அரசு சார்ந்த சக்திகளும் இந்தப் பல்லினத் தன்மையைப் பற்றிப் பேச முற்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இவர்கள் பேசுகின்ற இந்தப் பல்லினத் தன்மை உளப்பூர்வமானதா ? அது மற்றைய இனங்களுக்கும், அவர்களது கலாசாரம் தனித்துவத்திற்கும் சமத்துவமளித்துப் பேணுகிறதா என்றால் இல்லை என்பதே உண்மையான விடையாகும்.

அப்படியானால் அவர்கள் பேசுவது என்ன என்பதை நாம் உன்னிப்பாய் ஆய்ந்து பார்த்தல் அவசியம். அது என்னவென்றால் இது வரைகாலமும் இந்தப் பல்லினத்தன்மையை நிராகரித்து வந்தவர்கள் அதுபற்றிப் பேச மறுத்தவர்கள் ஆகியோருக்கு எதிராக வரலாறு தன் தடத்தில் உண்மையை ஏற்றி விட்டுச் செல்வதாகும். அந்த உண்மையின் புறத்தோற்றத்தை எதிர்கொள்ள முடியாதவர்கள் கையாளுகிற தந்திரமே இந்தப் பல்லின பல கலாசாரக் கோஷம்.

அதாவது இதுகாலவரை சிங்கள பௌத்தத்தைப் பற்றி மட்டுமே பேசியவர்கள் இன்று இந்தப் பல்லினத் தன்மை நிராகரிக்கப்பட முடியாதது என்பதை உணர்ந்து கொண்டு, ஒரு புதிய வழிமுறையைக் கையாள முனைகிறார்கள். எவ்வாறெனில் சிங்கள பௌத்த கலாசாரத்தினை மேலுள்ள முதலாம் படியாகவும், அதற்குக் கீழ் (கவனிக்கவும், சமத்துவமாக அல்ல) ஏனைய சிறுபான்மையினக் கலாசாரங்களை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி ஓர் ஒழுங்குபடுத்தலை ஒழுங்கு படுத்தலாகும்.

இதை அடியொற்றித் தான் ஏரிக்கரை பத்திரிகை பத்தி எழுத்தாளர் சிலரும், அரசும் பல்லினத் தன்மை பற்றி பேசிவருகிறது. இந்த இடத்தில் நாம் அவதானமாயிருக்க வேண்டியது யாதெனில் இவ்வாறான ஒரு பொறிக்குள் விழுந்து விடாதிருப்பதே

இவ்வாறான போக்குகளைப் புரிந்து கொண்டு இவற்றிற் கெதிராக உண்மையான ஒரு பல்லினத் தன்மையை, பல கலாசாரத் தன்மையை உருவாக்க, நாம் ஆரம்பத்தில் எழுப்பிய கேள்விகளுக்கான தேடலுடன் இவை தொடர்பாய் முனைப்புடன் செயல்பட ஆரம்பித்திருக்கிறது. 'விபவி' என்கிற மாற்றுக் கலாசாரத்திற்கான மையம்.

டிசெ. 13, 14, 15 இல் ஜோன் டி சில்வா அரங்கிலும், கலாபவனத்திலும் கலைவிழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. அந் நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட சில படங்களையே நீங்கள் இங்கு காணுகிறீர்கள்.




இ. சந்தரன்






நன்றி - நூலகத்திட்டம்



# கறுப்பர்களை அழிக்கும்வரை...



இரவு 8.30 மணி. ப்ரான்ஸ் கஃப்காவின் படைப்புகள் தொடர்பான ஒரு நாடகத்தைப் பார்க்க நாங்கள் மூவர் - நான், நண்பர், நண்பரின் மனைவி - செக்கோசெலவாக்கியாவின் நகரொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். ட்ராமிலிருந்து இறங்கி சற்றே இருள் படர்ந்த தெருவில் நாங்கள் நடக்கிறோம்.

எதிர் முனையில் 15 பேர் கொண்ட நாஸிகள் வந்து கொண்டிருக்கின்றனர். முற்றாக மழிக்கப்பட்ட தலை; கனத்த பூட்ஸ்கள்; கறுந்தடிகள். அவர்களை இனங்கண்டு சுதாகரிப்பதற்குள் அது நடந்துவிட்டது.

திடீரென எங்களை நோக்கித் துரிதமாய் ஓடிவந்த நாஸிகள் எதிர்பாராதவாறு கண்ணீர்ப் புகையடித்து, எங்களைச் சூழ்ந்து மொய்த்துக்கொண்டு தாக்க ஆரம்பித்தனர் எனது நண்பரின் தலையிலிருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. நண்பரின் மனைவியை ஒரு நாஸி வெறியன் கடுமையாகத் தலையில் தாக்கினான். தாக்கிவிட்டு அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர்.

அந்த இடத்தில் யாரும் எங்களுக்கு உதவ வரவில்லை. அங்கு நின்ற வியட்நாமியப் பெண்மணி ஒருவர் கூறினார் "ஒரு வாரத்திற்கு முதல் ஒரு சீன டாக்டரும் இதேபோல் இந்த வெறியர்களால் தாக்கப்பட்டார்".

1970களின் பிற்பகுதியில் "இன வெறி இசை அரங்கிலிருந்து" கிளைத்த மொட்டந்தலையர்கள் (Skin Heads) தாம் உருப்பெற்ற இங்கிலாந்திலிருந்து இன்று பிற மேலை நாடுகளிலும் தமது நச்சு வலையை விஸ்தரித்துள்ளார் கள். இந்த "ஸ்கின்ஸ்" இனவெறிக் குண்டர்கள் வெறும் அச்சம் தரும் தோற்றம் கொண்டவர்கள் மட்டுமல்லர். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நடந்த பல இன-நிற வெறிக் கொலைகளுக்குப் பின்னணியில் இந்த வெறியர்களே இருக்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பா எங்கணும் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கட்டவிழ்த்துவிடுவதில் இவ் வெறியர்களின் பங்கும் முக்கியமானது.

இன-நிற வெறிப் பயங்கரவாதத்திற்கு இன்று செக்கோசெலவாக்கியாவும் விதிவிலக்கல்ல. மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே இங்கும் இது ஒரு "தேசிய" வெளிப்பாடாகத் தோற்றம் காட்டுகிறது. செக்கோவின் வொஷிமியாவில் "செக்" குடியரசுக் கட்சியோடு இந்த வெறியர்கள் கூட்டுச் சேர்ந்து இயங்குகிறார்கள்.

இவ்வின-நிற வெறியர்களின் "இலட்சியம்" பற்றித் தெரிந்து கொள்வதற்காக செக்கோசெலவாக்கியாவில் புதிதாக வெளிவரும் 'புறொக்னொஸிஸ்' என்ற பத்திரிகையில் வெளிவந்த பேட்டியொன்றைத் தமிழாக்கம் செய்திருக்கிறேன். பிரட்டிப்லாவா நகரின் மதுபானச்சாலையில் ஸ்கின்ஸ் குழுவைச் சேர்ந்த ஒருவனை பத்திரிகையாளர் பேட்டி கண்டுள்ளார்.

*பத் : ஸ்கின்ஸ் என்றால் என்ன? நீங்கள் என்ன செய்கிறீர்கள்?*

ஸ்கி : அந்நிய அடையாளங்கள் எதுவுமில்லாத ஒரு தூய சமுகத்தைக் கட்டியெழுப்பும் இனக் கருத்தோட்டத்தைக் கொண்ட மக்களின் கூட்டுத்தான் ஸ்கின்ஸ். ஒரு கறுப்பனோ, ஒரு அராபியனோ அல்லது ஒரு ஜிப்ஸியோ வெள்ளையரைத் தாக்கினால் அவர்களை எதிர்த்து நாம் பாதுகாப்பு வழங்குகின்றோம். கறுப்பர்களும், ஜிப்ஸிகளும் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை மாற்றித் திரிகிற சோதாப் பேர்வழிகளும் ஒரு வேலையும் பார்ப்பதில்லை. எனவே நாம் ஒருங்கிணைந்து இதற்கு ஒரு வழி பண்ணியாகவேண்டும்.

*பத் : உங்களுடைய குழு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்தாபனம் போன்றதா? உங்கள் பங்கு என்ன?*

ஸ்கி : இன்னும் இறுக்கமான ஸ்தாபன வடிவத்தைப் பெறவில்லை. நான் மக்களை ஒழுங்குபடுத்தி அவர்களைச் செயற்படத் தூண்டிவருகிறேன்.

*பத் : உங்களுக்கு சர்வதேச இனரீதியான இயக்கங்களுடன் தொடர்புகள் உண்டா?*

ஸ்கி : சில தொடர்புகள் உண்டு தான். கிரேக்க வெள்ளை இனத் தலைவர் ஜோரியஸ் கொரில் எங்களின் ஒரு இலட்சிய நாயகர்.

*பத் : நீங்கள் உங்களை செலவாக்கிய தேசியவாதி என்று கருதிக் கொள்கிறீர்களா?*

ஸ்கி : ஆம். சந்தேகமென்ன.

*பத் : உங்களிடம் அதிகாரமும், நிறையப் பணமும் இருக்குமானால் என்ன செய்வீர்கள்?*

ஸ்கி : மனிதர்களைப் போட்டு எரிப்பதற்கான பெரிய கிடங்கொன்றை அமைப்பேன். இதில் சகல யூதர்களையும், கறுப்பர்களையும், ஜிப்ஸிகளையும் போட்டு எரித்துக் கொல்வேன். வெள்ளையர்கள் தான் உலகை ஆள வேண்டும்.

*பத் : நாஸிகளின் கருத்துகளுடன் உங்களுக்கு உடன்பாடு உண்டா?*

ஸ்கி : சில கருத்துகளுடன் உடன்படுகிறோம். ஆரிய இனம் மட்டுமே உலகில் வாழவேண்டும் என்ற கருத்துடன் உடன்பாடில்லை. நாகரிகமான தேசங்கள் மட்டுமே உலகில் வாழத் தகுதியுடையவை. மற்றவை அழிந்துபோக வேண்டும் என்ற கருத்துடன் உடன்படுகிறோம்.

*பத் : உங்களின் இலட்சிய நாயகர்கள் வேறு யார்?*

ஸ்கி : நல்லதொரு நாய். ஒரு திறமான குத்துச்சண்டைக்காரனை விட நல்ல நாய் திறம்படப் பணியாற்றும். இதைவிட செலவாக்கியாவின் முதலும் கடைசியுமான ஜனாதிபதி ரிஸோ.

*பத் : இந்த நகரில் எத்தனை ஸ்கின்ஸ் இருக்கிறார்கள்?*

ஸ்கி : 40 அதி தீவிரவாதிகளும், 300 சாதாரணமானவர்களும், 10,000 ஆதரவாளர்களும் இருக்கிறார்கள்.

*பத் : நீங்கள் எவ்வளவு காலத்திற்கு ஸ்கின்ஸ் ஆக இருப்பீர்கள்?*

ஸ்கி : இந்த உலகத்தில் கறுப்பர்கள் இருக்கும்வரை நாங்களும் ஸ்கின்ஸ் ஆக இருப்போம். இந்த கறுத்த முடர்களுடன் பேசிப் பயனில்லை. அதனால் இவர்களை அழிக் கும்வரை நான் ஸ்கின்ஸ் ஆகவே இருப்பேன்.

*பத் : பொலிஸ் பற்றிய உங்கள் அணுகுமுறை என்ன?*

ஸ்கி : இது முட்டாள்த்தனமான கேள்வி. எங்களைப் பற்றிப் பொலிஸ் என்ன நினைக்கிறது என்று கேள்.

*பத் : சரி, பொலிஸ் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறது?*

ஸ்கி : சில நேரங்களில் அவர்கள் எங்களை அனுசரிக்கிறார்கள். சில சமயங்களில் எங்களுக்கு கெடுபிடிகள் தருகிறார்கள். பொலிஸின் பணியைத்தான் நாங்கள் செய்கிறோம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

*பத் : எத்தனை வயதிலிருந்து ஸ்கின்ஸ் ஆக இருக்கிறீர்கள்?*

ஸ்கி : 12 வயதிலிருந்து. நாங்கள் தெருவில்தான் வளர்ந்தோம். அடியும், சண்டையும்தான் எங்கள் தினசரி வாழ்க்கை. எங்கள் பெற்றோர் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது.

வெள்ளையரல்லாதோரைக் கொன்றொழிக்கும் போக்குடைய குழுக்கள் வளர்ந்து வருவது இன்று அனைவருக்குமே அச்சுறுத்தலாயுள்ளது என்பதில் ஐயமில்லை. இதைக் கவனத்திற்கொண்டு பாஸிஸ எதிர்ப்பு அமைப்புகள் பலமாக்கப்படுவது அவசியமானதாகும்.

- மு. நித்தியானந்தன்.

நன்றி: தூண்டில்

நாடோடிகளாய் இருந்த காலம்
இருக்கிற காலம் இது. இந்த
முற்றுப் பெறுவதாய் இல்லை.
மழை விட்டு தூவானம் நிற்க
மழையாய் திரும்பவும் யுத்தம்.
அகதிகள் தொகை அ
குறைந்தபாடில்லை. எண்ணிக்

யுத்தப் பிரதேசங்களிலுள்ள
தமிழ்நாட்டு அகதி முகாம்கள்
நாடுகளிலும் தான் அகதிகள்.
சொந்த நாட்டிலிருந்தே விரட்
நாட்டிலும் இதே இன, நிற
எதிர்நோக்குகிற போது வருகிற
எழுத வார்த்தைகளில்லை.
(வழமையான அகதிகளுக்கா
கெடுபிடிகள் இன்னொருபுறம்.)
தஞ்சமடைந்த நாட்டிலிருந்து
தள்ளுமாப் போல் துரத்துகிறார்
இதைவிட அவர்களுடைய கா
முடியவில்லை. விலகவும் முடி
கொள்ளி எறும்பின் தவிப்பு நிை

இந்தச் சூழலிலிருந்து வெ
சஞ்சிகைகளில் இந்த அகதி வாழ்
வெளியான சில கட்டுரைகள் இ

அ

## ஒரு கிறிஸ்தவனின்

எங்கள் பரமபிதாவே !

சீதனத்தில் பாதித்தொகை
ஏஜென்சிக்குப் போய்விட்டது.

அரை வருடச் சம்பளத்தின் மீ
சீட்டுக் கழிவுக்குப் போய்விட்ட

ஒரு மாதச் சம்பளம்
இயக்கத்திற்குப் போனபின்
எனக்கென்று
ஆணிச் செருப்புக் கூட வாங்க

உயிர்த்தெழுந்த யேசுவே !

வேலைக்குப் போகும்போது
தூக்கத்தில்
அருகில் இருக்கும் பெண்ணின்
அவள் சிரிக்க
பதிலுக்குக் கூடச் சிரிக்கமுடியா
வேலை என்னைத் துரத்துகிறது

எனது ஆண்டவரே !

விடியலிற்குச் சற்றுமுன் தூங்கு
காலை எழுந்து ஓடுகிறேன்.

மிகச் சிறந்த மேய்ப்பரே !

உம்மிடம் இறைஞ்சிக் கேட்கிறே
எனது தேசத்தில்
என்ன நடக்கிறது ?
இந்த நற்செய்தியை மட்
சொல்லியருளும்.

ஆமென்!!!

- சுதன் -

நன்றி - நூலகத்திட்டம்



ாய் நாடற்றவர்களாய்
வாழ்க்கை ஒன்றும்
முடிந்தால் தானே.
ல் பெரும் அடை

ிக்கிறதே தவிர
லட்சக் கணக்கில்.

முகாம்களிலிருந்து
, ஏன் ஐரோப்பிய

ட இவர்கள், சேர்ந்த
மாழி பேதங்களை
இருக்கிறதே அதை

ந்தந்த அரசுகளின்

ாலரைப்' பிடித்துத்

ரத்துடன் ஒன்றவும்
லை. இரு தலைக்

ிற அவர்களுடைய
அவலம் தொடர்பாய்
றுபிரசுரமாகின்றன.

# அகதிகள் அகதிகள் அகதிகள்

## ...ண்ணப்பம்

வானத்து வெண்மை பூமியில் படிவுகளாகி, ஒரு சூரியன் தெரியா மார்கழி மாதத்துக் குளிர் நாள். வெகு வேகமாக ஒருவன் வீதியைக் கடந்து பொலிஸ் நிலையத்திற்குள் நுழைகின்றான்.

"நான்கு நாட்களாக எனது நண்பனைக் காணவில்லை. அவனது அடையாள அட்டை மட்டும் தெருக்கரையோரம் கிடந்ததாய் தபாற் சேவகன் தந்தான்" எனச் சொல்லி அழுதான்.

பொலிஸார் பதிவேட்டில் பெயரைப் பதிந்தார்கள். அடையாள அட்டை பரிமாறப்பட்டது சமூக சேவை அலுவலகத்திற்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. வெகு சூட்சமமாய் சமூகசேவை உதவிப் பணத்தை மீதப்படுத்த ஒரு வாய்ப்பு வந்துவிட்டதை உணர்ந்த அவர்கள் உதவிப்பணத்தை நிறுத்தினார்கள்.

நாய்கள், பூனைகள் தொலைந்துவிட்டால் கூட பக்கத்திற்கு பக்கம் தேடுங்கள், தேடுங்கள் என்று மனிதர்களை முடுக்கும் செய்திப் பத்திரிகைகள், வானொலிகள், வானொலிகள் வாயை மூடிக்கொண்டு "இந்த வெளிநாட்டகதி தொலைந்தால் தொலையட்டும்" என வேண்டாவெறுப்பாக ஒதுங்கிக் கொண்டன.

காடுகளிலும், மலைச் சாய்வுகளிலும், கடும் பனிக்குளிரிலும் சளைக்காத உலகின் தலைசிறந்த ஜேர்மானிய மோப்ப நாய்கள் இந்த ஈழத் தமிழனை தேடுவதற்கு முடுக்கி விடப்படாமல் மூலையில் படுத்திருந்தன.

வட ஈராக்கிலே அகதியாகிப் போன குர்திஸ்தான் மனித்ரகளுக்கு மருந்துகொண்டு போவதாக உலகிற்கு படம் பிடிக்கும் இந்த மாமனிதர்கள் தங்கள் நாட்டிலே, தங்கள் தயவை நாடிவந்து, உண்டு, உறங்கிய மனிதன் எங்கே போனான் ? எப்படி போனான் ? என்பதைக் காணவிருப்பமில்லாதவர்களாக கண் மூடியிருந்தார்கள்.

காலம் நீடித்தது. கருமை குறைந்து, வெண்மை கரைந்து, சூரியன் பளிச்சிட்ட நாட்கள், இலைவிட்ட மரங்கள் மீண்டும் துளிர் விட்ட நேரம் ; சுமார் 3 மாத இடைவெளிக்குப் பின்னால் ஓர் நாள் நரிகளின் கூக்குரல், காக்கைகளின் பரபரப்பு ... பாதையோரம் நடந்த மனிதர்கள் பரிதவித்துப் போனார்கள்.

ஓர் ஒதுக்குப்புற பாதையோர வடிகாலுள் மிதந்தது ஓர் ஈழத் தமிழனின் உடைபோட்ட எலும்புக்கூடு, கண்டு பிடிக்க வேண்டிய பொலிசாருக்கு கண்டவர்கள் செய்தி கொடுத்தார்கள். கூக்குரலோடு வரிசை வரிசையாய் பொலிஸ் வாதனங்கள் எலும்புக்கூட்டிற்கு உயிர் கொடுப்பதுபோல அவசர அவசரமாக அம்புலன்ஸ் வண்டிகள். பத்திரிகைகள் போட்டி போட்டெழுதின. வானொலி அவற்றையும் மிஞ்சியது. தற்கொலையென நிரூபிப்பதில் மரண விசாரணைகள் தீவிரமாகின.

அந்த ஈழ அகதி விண்ணப்பதாரியின் எலும்புக்கூடு ஆடம்பரமில்லாமல் ஓர் நாள் காலை 7 மணிக்கு மண்ணுள் புதைக்கப்பட்டது. சோசல் வேலை என்ற பெயரில் மணித்தியாலம் 2 மாக் வழங்கி காட்டு மரங்களை வெட்டி தோலை உரிப்பித்தவர்கள் அவனின் தோல் உரிந்த எலும்பு கூட்டை மண்ணுள் புதைத்தனர். அந்த மண்ணின் மேல் இன்று அவனின் "தேவராசா சிவலிங்கம்" என்ற நாமச் சிலுவை !

நண்பனே !
இதமான பனிக்கட்டி – உன்
எலும்பை நருகும் !

நாய்களும், நரிகளும் ...
உன் உடல் பிடுங்கும் !!

நீதிக் கண்களில்
கறுப்புத் துணிகள்.

விரலைச் சூப்பும் குழந்தைகள்
கூட
விண்ணப்பதாரியாய்
பெயர்களில் மாற்றம் !இருந்தும்
தஞ்சவிண்ணப்பதாரி – நீ
ஏன்? சாவுவிண்ணப்பதாரியானாய்

ஓ நண்பனே ..
இந்நாட்டு அகராதியில்
தஞ்சமென்பது
சாவு என்னும்
அர்த்தத்தில் தானோ ?

### அகதிக் கொலைவெறியில் இருந்து.

... தொலைக்காட்சிகள் இறந்தவர்களின் எண்ணிக்கையை எண்ணிக்கொண்டிருக்கின்றன. பொலிஸார் குருதிக் குளியலை போட்டோ பிடிக்கின்றார்கள். பத்திரிகைகள் கொட்டையெழுத்துகளில் கொலைகளையும், தாக்குதல்களையும் வர்ணணைகள் செய்கின்றன. பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் தொடர்கின்றன. வானொலி வசனம் பேசுகிறது. இதுவரை எந்த ஜேமானிய வெறியனும் கைது செய்யப்படவில்லை. மாறாக இவற்றை ஒரு விளம்பரமாக்கி மீதமுள்ள வெள்ளையரும் அயலிலுள்ள அநாதைகளைத் தாக்கி வீரவிழாக் கொண்டாடட்டும்.

இன்று தெருக்களில் எந்த வெளிநாட்டவரும் இல்லை. தங்கள் அறைக்குள் அடைந்து கிடக்கின்ற இவர்கள் எந்த நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர். ஒரு இயந்திரத் துப்பாக்கியின் சடசடப்போ, 'டமால்' எனற வெடிகுண்டின் பேரோசைக்காகவோ அவர்கள் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டுள்ளனர்.

தங்கள் பெயர்களை வீட்டுக் கதவுகளிலிருந்து கிழித்தெறிந்தும், தங்கள் பாடல கசற்றுக்களை போடாமலும், குழந்தைகளின் மழலையைக்கூட வாயைப் பொத்தி நிறுத்தி, தற்காப்புத்தேடி விழித்துக்கொண்டிருக்கும் இந்த ஏழை மக்களின் விடிவு ? எதிர்காலத்தில் இவர்களுக்கான தீர்வு ?

...ாதிருப்பதேன்?

ல் சாய

ன்.

# புலம் பெயர்ந்தோர் இலக்கியம் – பார்வையும் பதிவும்

தமிழ் பேசும் மக்களின் விடுதலை தொடர்பாக எம்மிடம் வேறுபட்ட பல அபிப்பிராயங்கள் இருப்பதாலும், அதனை மக்களிடம் எடுத்துச் செல்லவும், விவாதத்திற்குள்ளாக்குவதற்காகவும் நானும் இன்னும் இது தொடர்பாய் அக்கறையுற்ற சில நண்பர்களும் சேர்ந்து சஞ்சிகை ஒன்றை வெளியிட உள்ளோம். சஞ்சிகை இம்மாத இறுதியில் உனக்குக் கிடைக்கும்"

இது ஐரோப்பிய தேசமொன்றில் வாழும் எனது நண்பனொருவன் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி. இத்துடன் ஐரோப்பாவிலிருந்து எத்தனை சஞ்சிகைகள் வருகின்றன என எண்ணிப் பார்த்தேன். 37 உடன் நின்றது. கடந்த முறை பட்டியலிடும் போது 45 இருந்ததாக ஞாபகம். நான் சிலவற்றை மறந்து போயிருத்தல் கூடும். போகட்டும்.

அது சரி, ஐரோப்பாவிலிருந்து இவ்வாறு ஏராளமாக சஞ்சிகைகள் வெளிவரக் காரணமென்ன ? என்ற கேள்வி எம்முன் எழுகிறது.

அயலிலும் தமிழ் நாட்டிலிருந்து ஏராளமான சிறுசஞ்சிகைகள் வெளிவருகிறது. ஆனால் அவற்றிற்கும் இந்த ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகளுக்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான வேறுபாடு என்னவென்றால் பெருமளவிலான தமிழ் நாட்டுச் சிறுசஞ்சிகைகள் அரசியலைப் புறக்கணிக்கிற அரசியலைக் கொண்டவை. ஆனால் இவை அவ்வாறல்ல.

எனக்கு ஞாபகம் 84 இன் இறுதியிலும் 85 இலும் ஈழத்தில் இதே போல ஏராளமான சஞ்சிகைகள் வெளிவர ஆரம்பித்தன. தமிழ் மக்களின் விடுதலைப் போரின் எழுச்சிக் காலகட்டமாக அது இருந்ததாலும், விடுதலையை முன்னெடுத்த இயக்கங்களின் அரசியல் கொள்கைகளையும், நடைமுறையையும், விமர்சிப்பதற்கும், விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தவுமாக அவை வந்திருக்கக் கூடுமென நான் நினைக்கிறேன். இதற்கு அவற்றில் வெளியான விடயங்கள் சாட்சி. (இவை தவிர ஒவ்வோர் விடுதலை இயக்கமும் தமது கொள்கையை மக்கள் மத்தியில் பிரச்சாரப் படுத்தவும் சஞ்சிகைகளை வெளியிட்டன).

ஆனால் துரதிஷ்டவசமாக தொடர்ந்து வந்த சூழல் இந்த ஜனநாயகக் குரல்களின் தொண்டைக்குள் தோட்டாக்களை வைத்து அடக்கிற்று. முன்னணியில் இருந்த எல்லா இயக்கங்களும் தம்பங்குக்கு கெட்டித்தனமாக இக்காரியத்தை ஆற்றியுற்றன.

இந்த ஜனநாயக மறுப்புச் சூழலும், தொடர்ந்த போரும் ஏராளமானவர்களை நாட்டை விட்டுப் புலம் பெயர வைத்தது.

இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களின் நமது மண்தொடர்பான அக்கறையும், தாம் தப்பித்து வந்துவிட்டோமே என்கிற குற்றவுணர்வும் இவர்களை 'ஏதாவது' செய்யுமாறு தூண்டியிருக்கிறது. இந்த 'ஏதாவதில்' ஒன்று தான் இந்தச் சஞ்சிகை வெளியீடு. இதையும் தவிர இன்னுமொன்று ; இலங்கையின் எப்பாகத்திலிருந்து கொண்டும் எழுத முடியாத விடயங்களை எழுதக் கூடியவாறான ஒரு ஜனநாயகச் சூழல் அங்கு நிலவுகிறது. நான் இப்படிச் சொன்னதும் அங்கு ஏதோ ஜனநாயகம் வாழ்வதாக நீங்கள் கற்பனை செய்ய வேண்டாம். துப்பாக்கிக் குண்டுகள் மிரட்டவில்லையே தவிர, துப்பாக்கி குண்டுகள் வருமென மிரட்டல் வருகிறது. இந்த மிரட்டல்களாலும் தடியடிகளாலும் சில சஞ்சிகைகள் ஓரிரு இதழுடன் நின்று போனதும், சில தயக்கம் காட்டுவதும் நடந்த நடக்கிற விடயங்கள்.

இவ்வாறான ஒரு பின்னணியைப் புரிந்து கொண்டு நாம் இச்சஞ்சிகைளைப் பார்வைக்குட்படுத்தினால் இலகு கருதி இவற்றை நாம் இருபெரும் பிரிவுகளாக வகுத்து விடலாம்.

ஒன்று; நேரடியாக அரசியல் சார்ந்தவை.

மற்றையது ; அல்லாதவை. இந்த அல்லாதவைக்குள் தமிழகத்து ஜனரஞ்சகச் சஞ்சிகைகளான குமுதம், குங்குமம், ஆனந்தவிகடன் வகையறாக்களைப் பற்றி நாம் அக்கறைப்படத் தேவையில்லை. அதே போல் அரசியல் சார்ந்த இயக்கங்களின் பிரச்சார ஏடுகளாக தம்மையும், தமது கொள்கைகளையும் நியாயப்படுத்த கவனிக்கவும் பிரச்சாரப்படுத்த அல்ல நியாயப்படுத்த – வெளிவரும் ஏடுகளைப் பற்றியும் நாம் அதிகம் அக்கறைப்பட வேண்டியதில்லை.

இந்த வகையில் நேரடியாக அரசியல் சார்ந்த ஏடுகளாக தூண்டில், மனிதம், சிந்தனை சமர் என்பவற்றைக் குறிப்பிடலாம். நேரடியாக அரசியல் சாராவிட்டாலும் அது பற்றிய பிரக்ஞையுடன் சமூகம், கலாசாரம், விஞ்ஞானம், பெண்நிலைவாதம் போன்ற பல விடயங்களுடன் வெளிவருகின்ற சஞ்சிகைகளாக சுவடுகள், பனிமலர், அ.ஆ.இ, ஓசை, அக்கினிக்குஞ்சு இப்படிப்பல பெண்நிலைவாதம் தொடர்பாய் சக்தி என்கிற சஞ்சிகையும் வெளிவருகிறது.

இனி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சஞ்சிகை பற்றி விரிவாகப் பார்ப்போம்.

அடுத்த இதழில் தூண்டில் பற்றி.

நன்றி - நூலகத்திட்டம்



# கத்தாரிடம் சில கேள்விகள்

அரசு என்பது குறிப்பிட்ட ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்கும் கருவியென்ற கருத்தை இன்று மறு பரிசீலனை செய்ய வேண்டி உள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் ஒரு சிலகுழுக்களே சகல வர்க்கங்களையும் அச்சுறுத்தி அரச இயந்திரத்தின் உதவி

## "லெனினா கார்க்கியா இறுதியில் வென்றவர்"

யுடன், அல்லது அதுபோன்ற ஒரு இறுக்கமான நிறுவனத்தின் உதவியுடன் பாசிச காட்டாட்சி நடத்துவதை நாம் அவதானிக்கலாம். ஆனால் அரசு என்பது தனக்கு என ஒரு திட்டவட்டமானதும் சிக்கலானதும் அமைப்பு வடிவத்தைக் கொண்டது. அது அரசின் வன்முறை, வன்முறையற்ற நிறுவனங்கள் எண்ணற்ற அதிகாரிகள், அதிகாரிகளின் அதிகாரங்கள் அரசஇயந்திரத்தின் உரிமைகள் கடமைகள் அரச இயந்திரம் ஒழுங்கமைக்கப்பட்டமுறை, அரசின் வன்முறைவடிவத்திற்கும் வன்முறையற்ற வடிவத்திற்கும் இடையிலான உறவு அரசு 'சிவில்' சமூகத்துடன் கொண்டுள்ள உறவு, இவ்வாறு அரசு பற்றிய பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை.

"அரச உலர்ந்து உதிர்ந்து விடும்" என்று மார்க்ஸ் சொன்னார். "முதலாளித்துவ அரசைப்புரட்சியின் மூலம் மாற்றியமைத்து பாட்டாளி வர்க்கம் கைப்பற்றி ஒழுங்கமைப்பதின் மூலம் அரசு உலர்ந்து உதிர்ந்து விடும்". என்று மார்க்ஸின் கருத்தை லெனின் விளக்கினார். மேலும் "முதலாளித்துவ அரசைப் புரட்சி மூலம் மட்டுமே. மாற்றமுடியும், ஆனால் பாட்டாளிவர்க்க அரசு உலர்ந்து உதிர்ந்து போவதன் மூலம் மட்டுமே அழிந்தொழியும்." என்கிறார் லெனின் ஆனால் எந்த ஒரு அரசும் உலர்ந்து உதிர்வதன் மூலம் லெனின் சொன்ன அர்த்தத்தில் அழிந்து ஒழியாது. மாறாக கட்சிக்கும்–அரசுக்கும், அரசுக்கும் சமுதாயத்திற்கும் அரசிற்கும்–சமுதாயத்திலுள்ள ஏனைய நிறுவனங்களிற்குமிடையிலான முரண்பாடே அரசை அடித்து வீழ்த்தி இல்லாதொழிக்கும்.

அரசு என்பதில் ஆட்களை மாற்றியமைப்பதானது அல்லது எதிர்காலத்தில் திட்டமிட்ட ஒரு நிலையான சமுதாயத்தைக்கட்டிக்காப்பதற்கான புதிய வடிவிலான அரச இயந்திரத்தின் நிறுவனங்களை நிறுவுவது அரசு உலர்ந்து உதிர்வதற்கோ அல்லது இல்லாது ஒழிந்து போவதற்கோ எந்த விதத்திலும் உதவமாட்டாது. நிலவிவந்த முதலாளித்துவ அரசுடன் உறவு கொண்டு அதனை காப்பாற்றச் செயல்பட்ட மேலும் அதன் அமைப்பில் ஓர் அங்கமாகச் செயல்பட்ட அரசியல் கட்சிகள், இராணுவம் நீதித்துறை பொலீஸ், பாராளுமன்றம், சிறைச்சாலை என்பவற்றிற்குப்பதிலாக பாட்டாளிவர்க்க அரசு அல்லது புதிய ஜனநாயக அரசு என்று சொல்லப்படுவதிலும் அதே அமைப்புவடிவத்தை நிறுவுவது. (பாராளுமன்றத்திற்குப் பதிலாக சோவியத்துக்களும் அரசியல் கட்சிகளுக்குப் பதிலாக பாட்டாளிவர்க்கக் கட்சி ஒன்றும்) எந்த வகையில் அரசை உலர்ந்து உதிர்ந்து போகச் செய்யும்? அரசும் அரசைக்கைப்பற்றும் கட்சிகளும், அவற்றின் நிறுவனங்களிலும் வரலாறு பூராக ஒரு உண்மையைக் காணலாம். அந்த உண்மையானது தாம் தேர்ந்தெடுத்த அமைப்பைக் கட்டிக் காக்க விரும்புகின்றன என்பதே ஆகும். தமது அமைப்பில் தாம் தலைமை தாங்கும் சமுதாயத்தில் மாற்றம் நிகழ்வதை எதிர்க்கின்றன. இதுரஷ்ய, சீனக்கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் பொருந்தும். ரஷ்யாவிலும், சீனாவிலும் நடந்த புரட்சிகர கால கட்டங்களின் போது அரசு அமைப்புக்கள் தமது அமைப்பை இறுக்க முடியாமல் அல்லது திட்டவட்டமானதும் சிக்கலானதுமான கட்டமைப்பைப் பேண முடியாமல் இருந்தமையும் நாம் காணலாம்.

இவ்வாறு சமுதாயத்தினது மாற்றத்திற்கு தடையாக இருக்கும் ஒரு அரசை ஒரு புரட்சிகர கட்சி கைப்பற்றுவதன் மூலம் ஒரு போதும் தொடர்ச்சியாக நடைபெறும் புரட்சிகளை, புரட்சிகரக்கட்சி முன்னெடுத்துச் செல்லமுடியாது. அத்துடன் தானே கைப்பற்றிய ஒரு அரசை புரட்சிகரக் கட்சி உலர்ந்து உதிர அனுமதிக்கும் என்று எதிர்பார்ப்பதே இயங்கியலுக்கு முரணானது. எதிரானவைகளுக்கியிலான முரண்பாட்டின் மூலமே ஒரு முரண்பாடு தீர்க்கப்பட முடியும் என்பது இயங்கியல், அரசும் கட்சியும் ஒரே தரப்பில் நிற்கும் போது முரண்பாட்டில் நேர்மறையான பாத்திரத்தை வகிக்காதபோது, அரசு உலர்ந்து உதிர்வதற்கு அல்லது அரசை இல்லாது ஒழிக்கும் உரிய பாதையில் கட்சி வழி நடத்தும் என்பது எவ்வாறு சரியாகும்? அரசை ஒரு புரட்சிகர கட்சி கைப்பற்றும் போது நடைமுறையில் அந்தக்கட்சியே புரட்சிக்குத்தடையாக மாறிவிட்டதையும், சமுதாய முன்னேற்றத்திற்கு ஒரு புரட்சிகர கட்சி தடையாகிவிட்டதையும் நாம் காணலாம். அவ்வாறான ஒரு நிலையில் அதற்கு எதிரான நிலையில் உள்ள சக்திகளே அரசு இல்லாது ஒழிந்து போவதற்கு உரிய நிலைமைகளை உருவாக்கும். இதனை ரஷ்ய, சீன அனுபவங்களிற்கூடாகவும் நாம் புரிந்துகொள்ளலாம். கத்தார் சொல்வது போல் அரசு சகல நிறுவனங்களையும், தன்னையும், தான் பேணும் அமைப்பையும் கட்டிக்காப்பதற்காக தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முனையும். இதே போல கலாசார நிறுவனங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முனையும். இதன் தொடர்ச்சியே புரட்சிகரக்கட்சி ஒன்று அரசைக் கைப்பற்றினால், புரட்சிகரக்கட்சியுடன் நட்பு முரண்பாட்டைக் கொண்டிருந்த கலாசார நிறுவனங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர அரசு முனையும். "புரட்சிகரக்கட்சி" அரசைக் கைப்பற்றுவதால் அந்த அரசைக் காப்பாற்றும் கலாசார நிறுவனமாக கலாசார அமைப்புக்கள் மாற வேண்டும். அல்லது அதற்கு எதிர் நிலையில் அந்த அரசை இல்லாதொழிக்கும் எதிர் நிலைக்கு அதாவது சமுதாயத்தை வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும் எதிர் நிலைக்கு கலாசார அமைப்புக்கள் செல்ல வேண்டும். இங்கே அரசைக்கட்சியுடன் இணைக்கமுயல்வதால் அரசுடன் முரண்பாடுடைய கலாசார அமைப்புக்களிற்கும்–கட்சிக்கும் இடையிலான முரண்பாடு பழைய நட்பு முறையிலான முரண்பாடு என்ற நிலையிலிருந்து பகைமுரண்பாடு என்ற நிலையை நோக்கி மாற்றமடையத்தொடங்குகிறது. ஏனெனில் அரசுடன் சமுதாய முன்னேற்றத்தை நோக்கும் எந்த அமைப்பும் நட்பு முரண்பாடு கொள்ள முடியாது. கத்தார் சொல்வது போலல்லாமல் அரசைப்புரட்சிகரக் கட்சி கைப்பற்றினால் கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையிலான முரண்பாடு நட்பு முரண்பாடு என்ற நிலையிலிருந்து மாறுபடும் என்பது தெளிவாகின்றது. இங்கே அரசை நியாயப்படுத்தும் கலாசார அமைப்புகளைக் கருதவில்லை. ஏனெனில் அவை புரட்சிகரமான பாரிய மாற்றங்களை விளைவிக்க முனைவதில்லை. அவை இருக்கும் நிலைமைகளை தொடர்ந்து பேணுபவை. அவைக்கும் அரசுக்கும் இடையில் 'நட்பு' முரண்பாடுகள் நிலவமுடியும்.

கலாசாரப் புரட்சியைச் சீன மக்கள் முன்னெடுத்த போது சீன சமுதாயத்தில் ஒரு தேக்க நிலை" நிலவுவதையும் அந்தத் தேக்க நிலை உடைக்கப்பட வேண்டும் என்று உணர்ந்த மாவோ இந்தக் தேக்கநிலை ஏற்பட்டதற்குரிய காரணங்களில் அரசைக் கட்சி கைப்பற்றியதும் ஒன்று என்று பார்க்கத் தவறினார். புரட்சியைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கே கட்சியின் பாரிய நிறுவன அமைப்பு அரசுக்கு முண்டு கொடுப்பதால் ஏற்படும் தடையையும் பார்க்கத்தவறினார். மேலும் செஞ்சேனை போல் ஒரு பாரிய ராணுவமும் லட்சக்கணக்கான கட்சி ஊழியர்களை உரிய அமைப்புவடிவத்தில் கட்டமைக்கப்பட்ட கட்சியும் சேர்ந்து உருவாக்கும் ஒரு அரசை கட்சியே உலர்ந்து உதிர்ந்து போக அனுமதிக்குமா? அல்லது எந்த சக்தி அதை இல்லாதொழிந்து போவதற்கு உரிய நிலைமைகளை உருவாக்கப்போகிறது என்பதனை மாவோ பார்க்கத் தவறினார். இவ்வளவு பாரிய செஞ்சேனையையும், இவ்வளவு பாரிய கட்சி ஊழியர்களையும் கொண்டு உருவாக்கப்படும் அரசுக்கு எதிரான சக்திகள் எவ்வளவு சிறியனவாக இருக்குமென்பது ஊகிக்க கூடியதே. இந்த நிலையில் இந்த சமுதாயம் எவ்வாறு முன்னேறும்? அதுவே இன்றைய சீன, ரஷ்ய சமுதாயங்களின் மாபெரும் 'தேக்கம்' இவ்வாறான சமுதாயங்களில் நிலவும் அரசு ஒழிக்கப்படும் என்பது அங்கே நிலவும் கட்சி அரசு போன்ற சிக்கலானதும், பாரியதுமான ஸ்தாபனக்கட்டுமானங்களை உடைக்கக் கூடிய சக்திகள் வளர்ந்து வருவதைக் கோருகிறது.

## "பாராளுமன்றத்துக்குப் பதிலாக சோவியத்துகள் அரசை உதிரச் செய்யுமா?"

ரஷ்ய அனுபவங்கள் சீன அனுபவங்களிலிருந்து மாறுபட்டவை, சீனாவில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து கட்சி பல அனுபவங்களைக் கற்றுக் கொண்டதால் முழுமையாக சீனாவிடுவிக்கப்பட்ட போது 'சீனக் கம்யூனிஸ்ட்கட்சி' தனது கட்டுமானத்திற்கேற்ப ஒரு அரசை தனது ஊழியர்களைக் கொண்டே நிறுவியது.

ஆனால் ரஷ்யாவில் அப்படி அல்ல. புரட்சியின் பின் போல் ஷெவிக்குகள் தம்மை விடப் பலம் வாய்ந்த ஒரு பாரிய அரச இயந்திரத்தை உருவாக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். எண்ணிகையில் குறைந்த கட்சியின் பழைய ஊழியர்களைக் கொண்டு ஒரு பெரிய அரச இயந்திரத்தைக் கட்டினார்கள். முன்பு புரட்சிக்கு முந்திய ரஷ்ய அரசு இயந்திரத்தில் இருந்தவர்களும் கம்யூனிஷ்ட் கட்சியில் சேர்ந்து புதிய அரசு இயந்திரத்தை அமைத்தார்கள். ரஷ்யாவில் சீனாவுடன் ஒப்பிடும் போது பலதவறுகள் நடந்ததற்கு இதுவும் ஒரு பிரதான காரணம்.

## "கட்சிக்கும் கலாசார அமைப்பிற்குமான உறவு எவ்வாறிருக்க வேண்டும்"

ஆகக் கட்சியானது சமுதாயத்தை வழிநடத்திச்செல்ல வேண்டுமாயின் தொடர்ச்சியான புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் அது அரசை என்றும் கைப்பற்றக்கூடாது. அரசுக்கும் அதற்கும் இடையிலான முரண்பாட்டையும் அரசுக்கும், சமுதாயத்திற்கும் இடையிலான ஏனைய முரண்பாட்டையும் சரியான முறையில் தீர்ப்பதன் மூலம் மட்டுமே அரசைக் கட்சி இல்லாதொழிக்கும்.

இவ்வாறான ஒரு நிலைமையில் கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையில் முரண்பாடுகள் நிலவும், ஆனால் அவை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக இரண்டும் எதிர்நிலையில் நிற்பதைத் தவிர்க்கும், ஆகவே அவை நட்பு முரண்பாடுகளாக விளங்கும். ஒரு அரசானது நிலவிவந்த காலம் முழுவதும் பொலிஸ், இராணுவம், சிறைச்சாலை போன்ற வன்முறை அமைப்பு வடிவங்களை நம்பி இருக்கவில்லை. கலாசார அமைப்புக்கள் என்ற வன்முறையற்ற அமைப்பு வடிவத்தையும் கொண்டு தன்னையும், தான் கட்டிக்காக்கும் சமுதாயத்தையும் தற்காக்க முனைகிறது. ஒரு அரசை அழித்தொழிக்க வேண்டுமாயின் அதனைக்காப்பாற்றும் அமைப்புக்களை அதன் கட்டுமானத்தை உடைத்து அதனைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் ஓர் அரசு இராணுவம், நீதித்துறை போன்ற நிறுவனங்களை வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது. அதே போல கலாசார அமைப்புக்களும், கலைஞர்களும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் போவதை எதிர்த்துப் போராட வேண்டும்.

மேலும் அரசை விட்டுப்பிரிக்கும் அமைப்புக்களிற்கும் கட்சிக்கும் இடையிலான உறவு என்ன? கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு என்ன? என்ற பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும். ஏனெனில் சோசலிஸம் என்ற பெயரில் ஒரு ஒடுக்கு முறைசமுதாயம் நிலவியதுபோல் புரட்சிகரக் கட்சி என்ற பெயரிலும் ஒரு அரசைவிடமோசமான ஒரு ஒடுக்குமுறை இயந்திரம் நிலவ முடியும். ஆகவே திட்டவட்டமாக சமுதாயத்தில் நிலவும் அமைப்புக்களின் இடையிலான இயங்கியல் ரீதியான உறவு என்ன என்பதுபற்றித் தீர்மானிக்க வேண்டும்.

இராணுவம், பொலிஸ், நீதித்துறை, சிறைச்சாலை போன்ற அமைப்புக்களிற்கு கட்சியுடனும், சமுதாயத்துடனும், அரசுடனும் இயங்கியல் ரீதியாக என்ன உறவு கொள்ள வேண்டும் என்பது இன்று உடனடியாகவும் திட்டவட்டமாகவும் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதேபோல் தான் கலாசார அமைப்புகளிற்கும் சமுதாயத்தில் நிலவும் ஏனைய அமைப்புக்களிற்கு இடையிலான உறவுவையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையிலான உறவில் கலாசார அமைப்புக்கள் கட்சியை நியாயப்படுத்தும் கட்சியின் பினாமி அமைப்புக்களாக ஒரு போதும் செயற்படக் கூடாது. கலை கலாசாரத்தின் வளர்ச்சியையும், அதன் சுயாதீனத்தன்மையும் ஒரு கட்சி ஏற்றுக் கொள்ளாமல் விடுவது தவறு தனது பிரச்சார நோக்கங்களிற்காகமட்டும் கலை, கலாசார அமைப்புக்களைப் பயன்படுத்துவது தவறு, எல்லா நிலைமைகளிலும் கலை கலாசார அமைப்புக்களின் மேல், மேலாண்மையை வைத்திருக்கவேண்டும் என்று நினைப்பதுவும் தவறு.

**— ராஜன்**

கார்க்கியையும் லெனினையும் ஒப்பிடும்போது "லெனின் தான் இறுதியில் வென்றவர்" என்கிறார் கத்தார். கார்க்கி ஒரு புரட்சிகர கலைஞன், லெனின் ஒரு புரட்சிகர கோட்பாட்டாளன், தத்துவவாதி, இரண்டுபேரையும் ஒப்பிட முனைவதும் வெற்றி தோல்வி கூற முனைவதும் ஏற்கக்கூடியதல்ல. இரண்டுபேரும் செயல்பட்ட தளங்களிற்கிடையில் இயங்கியல் ரீதியான உறவு இருந்தபோதும் அந்தந்த தளங்களின் சுயாதீனத் தன்மை கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இந்த இரண்டு தளங்களும் புரட்சிக்குக் காத்திரமான பங்கை ஆற்றக் கூடியது இருவருமே தமது தளங்களில் சிறப்பாகச்செயல் பட்டுப்புரட்சிக்குப் பங்காற்றினர். இருந்தபோதும் தமது துறைகளில் இருவரும் வென்றனரா? என்று ஆராய்வது பெரிய ஒரு பணி. அதைச் செய்வதில் மிகவும் அவதானம் வேண்டும். எனினும் தோழர் கத்தார் அவர்களே ஒரு கோட்பாட்டாளன் என்றமுறையில் லெனின் அரசு, கட்சி பற்றிய கோட்பாட்டில் தனது வெற்றியை உறுதிப்படுத்தியதாக உம்மால் கூற முடியுமா?

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சென்னைப்பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கப்பட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது.

இலக்கிய கலாநிதிப்பட்டம்.

சோளகம் பிறந்ததும் யாழ்ப்பாணத்தில் நாம் ஏற்றுகிற பட்டம் போல ஒன்றா இது என்றும், அதை ஏற்ற ஜெயலலிதாவுக்கு நேரமிருக்குமா என்றும் வியப்புடன் வினவினார் ஒரு அப்பாவி.

இல்லை இது தமிழ்நாட்டு முதலமைச்சர்களுக்கு வழங்கப்படும் வழமையான பட்டம் என்று விளக்கினார் அவருடன் சேர்ந்து செய்தியைப் படித்துக் கொண்டிருந்த விஷயம் தெரிந்தவர். 'அப்படி என்றால் ஏன் அவர்கள் ஜானகிக்கு அதைக் கொடுக்கவில்லை' என்று கேட்டார் அந்த அப்பாவி.

அவர் முதலமைச்சராக வருவார் என்று பல்கலைக்கழகங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. திடீரென்று வந்தார். பட்டம் கட்டுவதற்குள் அவர் பதவி போய்விட்டது. அதனால்தான் கொடுக்காமல் விட்டிருப்பார்கள்' என்றார் மற்றவர்.

இந்த உரையாடலைக் கேட்ட போது எம். ஜி. ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்கியபோது துக்ளக்கில் வந்த காட்டூன் எனக்கு ஞாபகம் வந்தது.

அப்போது வந்த இதழின் அட்டைப்படத்தில் ஒரு கழுதையின் கழுத்தில் "டாக்டர்" என எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது.

யாரென்று பாராமல் தனக்கு மூர்க்கக்குணம் வரும் போதெல்லாம் தனக்கு அருகில் நிற்பவரை உதைப்பதில் கழுதைக்கும், ஜெயலலிதாவுக்கும் ஒரு ஒற்றுமை உண்டு.

காளமேகம் இருந்தால் சிலவேளை இதற்கும் ஒரு சிலேடை வெண்பாவை பாடியிருக்கக்கூடும்.

"எட்டி உதைப்பதால் ..... இடையிடையே தொங்குவதால் ...." என்று தொடங்கி.

தமிழ் இலக்கியத்தில் ஜெயலலிதாவுக்கு கலாநிதிப்பட்டம் வழங்குவது குறித்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் தீர்மானத்தைப் பற்றிய இன்னொரு நண்பரின் அபிப்பிராயம் இது;

உருவத்தைப் பார்த்தால் ஜெயலலிதாவுக்கு "டாக்டர்" பட்டம் கொடுக்கும் போது உசிலை மணிக்கு மூன்று டாக்டர் பட்டங்கள் கொடுக்க வேணும்......

கொஞ்சம் சீரியஸான ஒரு 'அரசியல்' பேசும் வாசகர் ஒருவர் இப்படி எழுதியிருந்தார்.

"சென்னைப் பல்கலைக்கழகத்தில் இதுவரை டாக்டர் பட்டம் பெற்றவர்களில் யாராவது மானம் ரோசம் உள்ளவர்களிருந்தால் அதைத் திருப்பி அதனிடமே கொடுத்து விட வேண்டும்.

## கர்நாடக சங்கீதம்

நடுக்காட்டிலிருந்த கோயிலிலிருந்து
பறை அழைத்தது
ஆடு குத்துகிற மீசைக்காரக் கறுவல்
தன்முகம் சோகத்தோடு நீண்டு அடித்தான்
பறை ஓய்வுக்குப் பின்னாலும்
நெடுநேரம் அவன் முகத்திலிருந்து கடந்தகாலம்
துயரத்துடன் இசைந்தது.

இனி, அனைத்தையும் கழுவிக்கொண்டு போக
சத்தமில்லாத மழை நீண்ட நேரம் அமர்ந்தமர்ந்து
தூறியது
மருதமரங்கள், காயா, ஹுந்சூன் பனிச்சமரங்கள்
கொய்யா இவற்றில் வெண்மை படிந்தது.
பழங்காலத்து கோயில் மணியும்
சனங்களுக்காகவும் வெகுநேரம் இருந்த
தனிமைக்காகவும் சிணுங்கியது.

மழைக்குப் பிறகு கங்குல் காலமாகிவிட்டது
கிறவல் பாதையில்
புதைந்து புதைந்து வந்தேன்
ஈனஸ்வரத்தில் பூனையைப் போல மயில்கள் அகவின
பட்டிமாடுகள் நிலவில் மேய்ந்து பிறகும் நனைய நின்றன

-நட்சத்திரன் செவ்விந்தியன்.

வடக்குக் கிழக்கிலிருந்து வெளிநாடு போகவென்றும், உள்நாட்டுப் 'பயங்கர' ஜவான் காலத்தில் வாழ்வது சாத்தியமில்லை என்றும் கூறிக்கொண்டு கொழும்பு வந்திருப்பவர்கள் எக்கச்சக்கம்.

வெளிநாடுகளில் 'பஞ்சம் பிழைக்க' வென்று அகதிகளாகப் போனவர்களது மனைவிமார் பிள்ளைகுட்டிகளும் இவர்களில் அடங்குவர்.

எட்டடி ஆறடி அகலத்தில் திடீர் 'சிப்போட்' அறைகளை உருவாக்கி நாளொன்றுக்கு 100/= முதல் 300/- வரை வாடகை வாங்கும் திடீர் 'லொச்சுகள்' கொழும்பில் முளைத்து இவர்களுக்கு 'உதவி' செய்கின்றன. 'இன்கமிங் கோலுக்கு' நிமிடத்துக்கு 5/= முதல், 125 - 150/= ரூபாவுக்கு ஒரு நிமிட வெளிநாட்டுக் கோல் எடுப்பது வரை ரெலிபோன் வசதிகள் செய்து கொடுத்து இவை அவர்களைப் பராமரிக்கின்றன.

கொழும்பு ஐந்து லாம்பு சந்தியைச் சூழவுள்ள பத்துக்கும் மேற்பட்ட ஹோட்டேல்கள் இந்தப்புண்ணிய கைங்கரியத்தை மேற்கொள்கின்றன.

இவற்றில் தங்கும் இளைஞர்களை பொலிஸிலிருந்து பிடிபடாமல் பாதுகாப்பது என்ற பேரில் இடைக்கிடை அவை விசேட கப்பக் கட்டணம் ரசீது இல்லாமல் அறவிடுகின்றன. சில மளிகைக்கடைகளின் மேல் மாடிகளும் இப்போது 'லொச்சுகள்' ஆகிவிட்டன.

இளைஞர்கள் அங்கிருக்கும் குளியலறை, மலசலகூட வசதிக்குறைவுகள், மேலும் ஹோட்டேல் உரிமையாளர்களின் "கூட்டிவரும்" வேலை கட்குத் தடையாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் திடீரெனக் காணாமல் போகிறார்கள்.

இரண்டு, மூன்று நாட்களின் பின் காயங்களுடன் பொலிஸாரிடமிருந்து "ஹோட்டேல் முதலாளிகளால் மீட்கப்பட்டதாகக் கூறிக் கொண்டு அவர்கள் திரும்ப வருகிறார்கள் விபரம் கேட்டால் யாழ்ப்பாணத்தில் பயப்பிட்டதை விட அதிகமாகப் பயப்படுகிறார்கள். ஹோட்டேல் உரிமையாளர்களிடம் உள்ள சொந்தக் குண்டர் படைகளுக்கு அவர்கள் பயப்பிடுகிறார்கள்.

இதுபற்றி யாரிடம் முறையிடுவது என்று அவர்களுக்குத் தெரியாது. முறையிட்டாலோ அல்லது முறையிட முயன்றாலோ மறுநாளே தெருவில் நிற்க வேண்டி வந்துவிடும். தெருவில் நிற்கும் எவரும் புலிகளால் குண்டுடன் அனுப்பிவைக்கப்பட்ட ஒருவராகக் கருதப்பட்டு காணாமல் போகும் நிலை.

பாரதியின் நூற்றாண்டுகட்கு முந்திய கவிதை ஒன்று பிஜி தீவுத் தமிழர்களைப்பற்றி பேசும் போது இப்படிச் சொல்கிறது.....

விதியே விதியே தமிழ்ச் சாதியை

என் செயக் - கருதி இருக்கின்றாயடா ....?

அமைச்சர் தொண்டமான் அண்மையில் நடைபெற்ற இளம் தொழிற்சங்கவாதிகளின் தொழிற்சங்கத் தலைமைத்துவ பயிற்சித்திட்டக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆற்றிய உரை மிகவும் முக்கியமானது!

இது சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆசியபசுபிக் பிராந்திய அமைப்பும் இலங்கை மன்றக் கல்லூரியும் சேர்ந்து நடாத்திய ஒன்றாகும்.

இதில் பேசிய அமைச்சர் தலைமைத்துவ ஆளுமைகளை வளர்க்கப் பயிற்சி அவசியமாகும். ஆனால் பயிற்சியிலும் பார்க்க ஈடுபாடு அவசியமானது. தொழிற்சங்க அமைப்பு பிரதிநிதித்துவத்துக்குரிய குணாம்சத்தைப் பெற்றுக் கொள்ள எண்ணிக்கையில் பெரிதாகவும், தனித்துவமான தலைமையினை காத்துக்கொள்ளும் பலம் மிக்கதாகவும் இருக்க வேண்டும்!.

அமைச்சர் குறிப்பிடும் தனித்துவமான தலைமையினைப் பாதுகாத்துக் கொள்வது என்பதும், ஈடுபாடு என்ன என்பதும் யாருக்காவது புரியாவிட்டால் அதற்கு அமைச்சர் பொறுப்பேற்க இயலாது. பிரார்த்தனை போன்ற நவீனவடிவப் போராட்டங்களை நடாத்துவது, பிற தொழிற்சங்கங்கள் உருவாக விடாமல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றின் தலைவர்களைப் பொலிசார் கைது செய்வதை ஊக்குவிப்பது போன்ற இ. தொ. க. வின் முன்மாதிரியை இளம் தொழிற்சங்கத் தலைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இதன் சாரம்.

புலிகளுடனான பேச்சுவார்த்தை, இந்தியாவுடனான உறவு, அரசாங்கத்துக்கு தமது எல்லைக்குள்ளேயே சுதந்திரமாகப் போட்டியிட விட்டது. இலங்கை, இந்தியச் சமுதாயப் பேரவை மூலம் தொழிலாளர்களது தொழிற்சங்க நலன்களை மேம்படுத்துவது போன்ற இன்னோரன்ன தனித்துவமான அம்சங்களை இ. தொ. க கொண்டிருப்பதன் அடிப்படை இப்போதும் யாருக்கும் புரியாமல் இருந்தால், இதிலிருந்து புரிந்து கொள்வார்களாக.



சரிநிகர், மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்;

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.

சந்தா;
ஒருவருடம் :
உள்நாடு: 60/=
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



## பாரம்பரிய ...

மீதான ஆத்திரமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இந்நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் முஸ்லிம்களின் நலன்களைப் பேண வேண்டுமாயின் இரு நிகழ்வுகள் நிகழவேண்டும்.

அவையாவன:

1) முஸ்லிம்கள் சிங்களமக்களின் அபிலாஷைகளுக்கு முரணில்லாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியிடவேண்டும்.

2) இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை சிங்கள அமைப்புக்களோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளோ வெளியிட வேண்டும்.

அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கின் இலங்கை முஸ்லிம் சமூகம் வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்புக்குள் முஸ்லிம் மாகாணசபை வேண்டும் என்ற கோரிக்கையிலிருந்து நழுவி கிழக்கும் வடக்கும் தனியான இரு சபைகளாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏறக்குறைய எடுத்துவிட்டன போலத் தோன்றுகின்றது.

இதற்கு உதாரணமாக, அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய முஸ்லிம் பேரவை நடாத்திய இனப்பிரச்சினையும் முஸ்லிம்களும் என்ற தலைப்பில் பேசிய அனைவரும் கிழக்கு தனித்திருக்க வேண்டும் என்ற கோஷத்தினையே எழுப்பினர். இக்கூட்ட இறுதியிலும் கூட கிழக்கும் வடக்கும்வேறாக இருக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி முன்வைத்த வட-கிழக்கு இணைப்பிற்குள் முஸ்லிம் மாகாண சபை பாரம்பரிய முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து உருவாக்கப்படுவதோடு அதற்குரிய அதிகாரங்கள் மத்தியிலிருந்தே பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கை தட்டிக்கழிக்கப்பட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் ஜனாப் எம். ஐ. எம். முகைதின் ஆக்ரோஷப்பட்டு வடக்கும் கிழக்கும் தனியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டமை நான் மேலே கூறிய கருத்தான முஸ்லிம்கள் படிப்படியாக சிங்களவர் நலன் பேணும் வகையில் நடந்துக்கொள்ளவும் வேண்டும் முடிவுகளை எடுக்கவும் வேண்டும் என்பதற்கு முரண்படவில்லை.

அகில இலங்கை முஸ்லிம் லீக் ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து சங்கமமாகிவிட்டபடியால் ஐ. தே. க எடுக்கும் முடிவுகளே அக்கட்சியின் முடிவாக அமையப்போகின்றது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே வட - கிழக்கு இணைப்பு பற்றியோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் அர்த்தமுள்ள முஸ்லிம் மாகாண சபைக்கு அனுமதி கொடுக்க மறுத்தது பற்றியோ எவ்வித முடிவும் எடுக்காத நிலையில் அரசுடன் சேர்ந்து தொண்டமானைப்போல் சில உரிமைகளையும் சலுகைகளையும் பெறப்போவதாக கூறிக்கொள்கின்றனர்.

சிங்களப் பேரினவாதப் பயமுறுத்தலால் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தமாகிய இரண்டும் அமுல்படுத்தப்படும் தறுவாயில் கைகழுவிவிடப்பட்டது போல தமிழ் முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பும் அதன் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் மாகாண சபையும் தான்வழங்க முடியுமென சகல கட்சிகளும் தீர்க்கமாக முடிவெடுக்கப்படும் பட்சத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் 'ஜாதிக சிந்தனய' என்ற போர்வையில் பேரினவாதத்தை கக்கத்தொடங்கிவிட்டது. இதன் விளைவு இன்னொரு சிங்கள - தமிழ் அல்லது சிங்கள - முஸ்லிம் கலவரத்தை உருவாக்க வித்திடாது எனக்கூறுவதற்கில்லை.

தமிழ் மக்களின் மீது 56, 83 களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்து விடபபட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கின்ற 2/3 பங்கு முஸ்லிம்கள் எங்கு போய் தஞ்சமடைவது?

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் நாளாந்தம் அச்சுறுத்தல் ஏற்படுகின்ற பொழுது எங்ஙனம் சிங்களப் பிரதேசங்களில் நிம்மதியுடன் வாழும் 2/3 பங்கு முஸ்லிம்கள் வடக்கையும் கிழக்கையும் நோக்கிச் செல்ல முடியும்.

இந்நிலையில் அரசுடனான யுத்தத்தில் எல். ரீ. ரீ. ஈ க்கு ஏற்பட்டுவரும் இழப்புக்களுக்கு முஸ்லிம்கள் தான் பொறுப்பு என தவறாக மதிப்பிட்டு வடகிழக்கு முஸ்லிம்களை அவர்களின் பாரம்பரிய தாயகத்திலிருந்து விரட்டியடிக்க முடிவெடுத்துள்ளதாக எல். ரீ. ரீ. ஈ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் முதற் கட்டமாகவே மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போனற் தமிழ்ப் பிரதேசங்களில் சிறுபான்மையாக வாழ்ந்த முஸ்லிம்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட 60,000 க்கு மேலான முஸ்லிம்கள் இன்று தஞ்சமடைந்திருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு (மலையக தமிழர் அடங்கலாக) வடக்கும் கிழக்கும் பாரம்பரிய தமிழ் பிரதேசம் என பிரகடனம் செய்திருக்கும் தமிழ் இராணு, அரசியல் குழுக்கள் முஸ்லிம் விடயத்தில் வெளிப்படையான எக்கருத்தினையும் வெளியிடவில்லை. உதாரணமாக வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்த ஒரே மாநிலமாக பாரம்பரிய தாயகத்தன்மை பேணக்கூடிய ஒரு அமைப்பாக இருக்க வேண்டும் என வட - கிழக்கு முஸ்லிம்களும் வடக்கு - கிழக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களும் ஒருமித்த குரலில் கோருகின்ற பொழுது சிங்கள இனவாதத்திற்கு பலிபோகும் 2/3 பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் அடைக்கலம் கொடுப்போம் என எந்த தமிழ் இராணு, அரசியல் குழுவும் இதுவரை பகிரங்கமாக கூறவில்லை.

மாறாக அனைத்திலங்கையிலும் வாழ்கின்ற இலங்கை, இந்திய தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த மாநிலம் பாதுகாப்பு வழங்கக் கூடிய தனித்தமிழ் தாயகமாகும் என பகிரங்கமாக கூறும் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கும் வடக்கும் கிழக்கும் "தமிழ் பேசும் மக்கள்" என்ற அடிப்படையில் தாயகம் என்பதை ஏற்கமறுக்கின்றன.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வை முன்வைக்கத்தவறிவிட்டனர். அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் கூட இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடும் ஒரு முடிவுக்கு வர தவறிவிட்டது.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்க அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக பாராளுமன்ற தெரிவுக்குழு (Parlimentary Select Committee) ஒன்றைத் தெரிவு செய்யும் முகமாக முன்மொழிந்த பிரேரணை பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கான தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண அமைப்பை தமது உறுப்பினர் முன்வைக்கும் என்பது சந்தேகமாக உள்ளது. அவ்வாறு முன் வைத்தாலும் கூட 2/3 பெரும்பான்மையுடன் அப்பிரேரணை நிறைவேறுமா என்பதும் சந்தேகமாக உள்ளது.

இந்நிலையில் கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் மனோநிலையில் மாற்றமேற்பட்டு வருகிறது. காத்தான்குடி ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகள், முஸ்லிம்கள் தமது வயல்களுக்குச் சென்று தொழில் செய்யமுடியாத நிலை, முஸ்லிம்களின் பொருளாதார வளங்கள் சுவீகரிப்பு போன்ற சம்பவங்களால் முஸ்லிம்களின் மனதில் தமிழ் விரோத உணர்வுகள் மாறாத வடுக்களாக மாறி வருகின்றன. இதன் விளைவாக எதிர்காலத்தில் தமக்கு கிழக்கில் முஸ்லிம் மாகாணசபை கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி வடக்கும் கிழக்கும் இணைந்த எந்த ஒரு அமைப்பையும் போர்க்குணம் கொண்டு எதிர்க்கக்கூடும். இம்மாற்றத்தை மத்தியிலிருக்கும் எந்தெவாரு சிங்கள பேரினவாத அரசும் வரவேற்கும். இதை தமக்குச் சாதகமாக பாவித்து ஏற்கெனவே ஒத்திவைக்கப்பட்டிருக்கும் வட - கிழக்கு இணைப்பை பிரிக்கும் அல்லது நிரந்தரமாக்கும் சர்வசன வாக்கெடுப்பை அரசு நடாத்தி வடக்கையும் கிழக்கையும் பிரித்து இருநிர்வாகத்தின் கீழ் செல்ல அனுமதிக்கக் கூடும் இது நடந்தால் பலவருடங்களாக தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ் இராணுவ, அரசியல் குழுக்களுக்கு பலத்த தோல்வியாக முடியும். ஏற்கெனவே இருக்கும் எல்லாவற்றையும் இழந்து சொல்லொண்ணாத் துன்பம் அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு எந்தெவாரு நன்மையும் இல்லாமல் போகும் தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டம் சிதறிப்போய்விடும். இந்நிலைமை ஏற்பட்டதற்கு தமிழ் இராணுவக் குழுவான எல். ரீ. ரீ. ஈ யின் முழுப்பொறுப்பை ஏற்கவேண்டும். எனவே தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்ச கோரிக்கையான வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பை வென்றெடுக்க பின்வரும் வழிவகைகளை தமிழ் இயக்கங்களும் எல். ரீ. ரீ. ஈ யும் எடுக்கவேண்டும்.

1. வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பின் கீழ் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் அதற்குரிய பொருளாதார வளங்களையும் உள்ளடக்கியதான அமைப்பொன்றை ஏற்படுத்தி அதற்கு மத்தியிலிருந்து கணிசமான அளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட தமிழ் குழுக்கள் இசைய வேண்டும்.

2. சிங்கள பாரம்பரியப் பிரதேசங்களில் அடைக்கலம் கோரி அல்லல்ப்படும் வடக்கு - கிழக்கு முஸ்லிம் அகதிகள் மீண்டும் திரும்பி வந்து தமது பழைய இடங்களில் வாழ எல். ரீ. ரீ. ஈ அனுமதிக்க வேண்டும்.

3. வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களிடமிருந்து அபகரித்த பொருளாதார வளங்களையும் சொத்துக்களையும் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

4. வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் முஸ்லிம்கள் தமது வழமையான சமூக, கலாசார, அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக பின்பற்ற அனுமதிக்க வேண்டும்.

மேற்கூறிய முடிவுகளை வெளியிட எல். ரீ. ரீ. ஈ இனதும் மற்றைய தமிழ் இராணுவ அரசியல் குழுக்களினதும் மனோநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் நீண்டகாலமாக பின்பற்றி வரும் முஸ்லிம் விரோத சிந்தனைப்போக்கிலும் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். தமிழை தாய் மொழியாகக் கொண்ட கிறிஸ்தவர்களையும் பௌத்தர்களையும் எவ்வாறு அன்னியோன்னியமாக நடாத்துகிறார்களோ அவ்வாறு முஸ்லிம்களை புரிந்துக்கொண்டு நடத்த வேண்டும். முஸ்லிம்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து அவர்களையும் சமமாக மதித்து நடக்கப்பழகிக் கொள்ளவேண்டும். கடந்த நாற்பது வருடங்களாக சிங்கள பேரினவாதத்திடமிருந்து தாம் பெற்ற அநீதியான இனவாதரீதியான அனுபவங்களை முஸ்லிம்களிடம் திணிக்கக்கூடாது.

இவை எல்லாவற்றிற்கும் தமிழ் மக்களின் அடைப்படை சிந்தனையில் மாற்றம் ஏற்படல் வேண்டும். அதாவது வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் அனைவருக்கும் உரித்தான பாரம்பரிய பிரதேசம் என பிரகடனப் படுத்த வேண்டும். தமிழ் தாயகம் தனித்தமிழ்ஈழம் போன்ற இனவாத கோஷங்களை களைய வேண்டும்.

இவ்வாறான போக்குகள் நிச்சயமாக சிங்கள பேரினவாதத்திற்கு பேரிடியாக முடியும். வடக்கு - கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் பலமானதும் ஆரோக்கியமானதுமான ஒரு தமிழ், முஸ்லிம் சமுதாயம் உருவாகவும் மீண்டும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அன்னியோன்னியமாகவும் சமாதானத்துடனும் வாழ அதற்குரிய வழிவகைகளை தேடுவோம்.

---

இக் கட்டுரை தொடர்பாக இரண்டு குறிப்புகளை எழுத வேண்டியதாகிவிட்டது. ஒன்று: இக்கட்டுரை அச்சுக்குப் போகத் தயாரானபோது வவுனியாவிலிருந்து கிடைத்த தகவலொன்று கூறுகிறது; கடந்த சனியன்று (ஜனவரி 18) யாழ் குடாவில் எஞ்சியிருந்த முஸ்லிம் குடும்பங்களில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்டுள்ளனர். இவர்கள் சுன்னாகத்தில் வசித்து வந்தவர்கள். இறைச்சி வியாபாரம் இவர்களது தொழில். சுன்னாகப் புலிப் பொறுப்பாளர் இவர்களை வாகனத்தில் ஏற்றி வந்து தாண்டிக்குளத்தில் விட்டுவிட்டு வவுனியாவுக்கு அப்பால் போகுமாறு விரட்டியுள்ளார். உடுத்த உடையுடன் மட்டுமே தாம் ஏற்றி வரப்பட்டதாக ஸியாகத் அலி (42 வயது), ரஹ்மதுல்லா (36 வயது) ஆகியோர் கூறுகின்றனர். தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்ற புலிகளின் கோட்பாட்டின்படி ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்னர் வடக்கிலிருந்து 60,000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விரட்டப்பட்டதும் இன்னமும் அவர்கள் அகதி வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் ஒரு துயரம்!

'கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு செய்தவற்றை செய்துவருபவற்றை தமிழ் மக்களும், தமிழ் அரசுகளும் முஸ்லிம் மக்களுக்கு செய்யக்கூடாது' என்றும்,

அவ்வாறு 'முஸ்லிம் மக்களை அடித்துத் துரத்திவிட்டு உருவாக்கப்படும் ஈழம் இஸ்ரேலாகத் தான் இருக்க முடியுமே தவிர ஈழமாக இருக்க முடியாது' என்றும்,

"பலஸ்தீனியரை இஸ்ரேல் இவ்வாறு தான் வெளியேற்றியது. ஆனால் பலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்க முடியவில்லை. இஸ்ரேலும் தன்னுடைய 'பாதுகாப்பை' உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை" என்றும்

எனவே மொத்தத்தில் இது ஈழத்தின் தேசியத் தற்கொலையே என்றும் சரிநிகர் குறிப்பிட்டிருந்தது. இன்றும் சரிநிகர் கூற விரும்புவது அதைத்தான்.

இது ஒரு ஈழத்தின் தேசியத் தற்கொலையே!.

இரண்டாவது விடயம் என்னவென்றால், வெளியாகிற இந்தக் கட்டுரை பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதாகக் கூறிக்கொள்கிற முன்னணித் தினசரிகளுக்கெல்லாம் கட்டுரையாளரால் அனுப்பப்பட்டு அவர்களின் 'பத்திரிகா தர்மத்திற்கமைய' பிரசுரிக்கப்படாது போய் இறுதியாக இப்போது சரிநிகரில் பிரசுரமாகிறது என்பது.

வாழ்க கருத்துச் சுதந்திரமும், பத்திரிகா தர்மமும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டாவும் தேசியத் தொண்டும்

அமைச்சர் தொண்டமானின் சமாதானத் தீர்வு பல்வேறு வாதப்பிரதிவாதங்களைத் கிளப்பி விட்டுள்ளது. அது தொடர்பாக இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துகமான இயக்கத்தின் செயலாளர் ச. பாலகிருஷ்ணனின் கருத்துகளைக் கீழே தருகிறோம். அரசியலார்களும், வாசகர்களும் அபிப்பிராயங்களை எழுதலாம்.



- ச. பாலகிருஷ்ணன் -

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்களின் நலன்கள் தொடர்பாக பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களுடன் இலண்டனில் பேச்சுவார்த்தை நடாத்திய பின் கப்பல் மூலமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த சேர். பொன். இராமநாதன் தனது வீடு நோக்கி செல்வதற்கு தாயாராக வைக்கப்பட்டிருந்த குதிரை வண்டியில் ஏறியபொழுது அவரை வரவேற்பதற்காக துறைமுகம் சென்றிருந்த சிங்களத் தலைவர்கள் குதிரையை வண்டியிலிருந்து அகற்றிவிட்டு தாங்களே வண்டியை இழுத்துக்கொண்டு கொழும்பு வீதிகளினூடே இராமநாதனுடைய வீட்டிற்கு அவரை இழுத்துச் சென்று நன்றிக்கடன் செலுத்தியது போன்ற சம்பவங்கள் மலையேறிவிட்டதென்பதை இந்த இனவாத முரண்பாட்டின் தீர்விற்கான தொண்டமானின் பிரேரணைகள் தொடர்பாக நடத்தப்படுகின்ற வாதப் பிரதிவாதங்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தொண்டமானின் பிரேரணைகள் தமிழ் மக்களின் அரசியற் சுதந்திரத்தையும், சுயாட்சிக்கான உரிமையையும் ஓரளவிற்கு அங்கீகரிக்கின்றதோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம், சிங்கள் மக்களின் சுயாட்சியையும் உறுதிசெய்யும் விதத்தில் அமைந்துள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட்டு ஒரே பிரதேசமாக அமைவதும் அப்பிரதேசம் தமிழர்களுக்கான அதிகாரப் பிரதேசமாக அமைவதையும் முஸ்லிம், சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்கள் வடகிழக்கு மாகாணத்திற்குட்பட்ட ஆனால் சுதந்திரமான அதிகாரப் பிரதேசங்களாக செயற்படுவதையும் உறுதிசெய்வதாக அமைந்துள்ளன. கனடா, சுவிற்சலாந்து அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்படுகின்ற சமஷ்டி ஆட்சி முறையையோ அல்லது இந்தியாவில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற சுயாட்சி முறையையோ விட மிகக் குறைவான அதிகாரப் பங்கீட்டை முன்வைப்பதாகவே இப்பிரேரணைகள் அமைந்துள்ளன. எனினும் இன்றைய காலகட்டத்தில் இனவாத முரண்பாட்டிற்கான முறையான அரசியல் தீர்வை அடைவதற்குத் தேவையான பேச்சுவார்த்தைகளை நடைமுறைப் படுத்தக்கூடிய சிறந்த அடித்தளமாக இப்பிரேரணைகள் அமைந்துள்ளன. இதற்கு முன்பு இது போன்ற பிரேரணைகள் பல்வேறு பிரிவினர்களால் முன்வைக்கப்பட்டாலும் அவை இந்தளவு வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப் படவில்லை. தொண்டமான் அமைச்சராக இருந்துகொண்டே இப்பிரேரணையை முன்வைத்திருப்பதனால் இவ்வகையான வாதப்பிரதிவாதங்கள் உருவாவதற்கு இடமளித்திருக்கலாம். ஐ.தே.க. அரசாங்கத்தின் அமைச்சராக இருந்துகொண்டே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் என்ற முறையில் தான் நான் இப்பிரேரணைகளை முன்வைத்திருக்கின்றேன். அமைச்சர் என்ற வகையில் அல்ல என தொண்டமான் வெளிப்படையாக பிரகடனப்படுத்துகின்றார். ஆனால் தனக்கு கிடைக்கப்பெற்ற அமைச்சர் பதவியையும், அந்தஸ்தையும் பாதுகாத்துகொள்வதில் ஐ. தே. கட்சியின் தலைமைக்கு மிகவும் விசுவாசமுள்ளவராக நடந்துகொண்ட அவரது கடந்தகால நடவடிக்கைகளை உற்று நோக்கும்பொழுது இத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனவாதப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பிரேரணைகளை ஐ.தே.க. அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் அனுமதியில்லாமல் முன்வைத்திருக்கமாட்டார் என்பதை நம்புவதற்கு இடமிருக்கிறது.

பிரேரணைகளை முன்வைப்பதன் பிரதான நோக்கம் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவைப்பது என்பதோடு இலங்கையில் இனவாதப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலை ஏற்படுத்துவதெனவும் தொண்டமான் கூறியுள்ளார். தொண்டமானின் இப்பிரேரணைகள் செயலற்றுகிடந்து பேரினவாதிகளுக்கு உயிர் வாயுவை அளித்து அவர்களின் பேரினவாத செயற்பாடுகளை மீண்டும் உயிர்ப்பித்துள்ளமையை வெகுசனதொடர்பு சாதனங்கள் மூலமாக காணக்கூடியதாக இருக்கின்றது. தொண்டமானின் பிரேரணைகள் இலங்கையில் பிரிவினையை உறுதிசெய்கின்றன. தமிழீழத்தை உருவாக்குவதற்கு சமனானவை, தமிழரான தொண்டமான் தமிழர்களுடன் இணைந்து தமிழர்களுக்கு விசுவாசமாக செயற்படுவார். சிங்களவர்களுக்கு விசுவாசமாக செயற்படமாட்டார். எனவே அவரது முயற்சி தடைசெய்யப்பட வேண்டும் என்பன போன்ற பல்வேறு இனவாத, சந்தேகங்கொண்ட கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. சிங்கள பௌத்த ஆதிக்கத்தை எந்தவகையிலேனும் நிரந்தரமாக இலங்கையில் நிலைநாட்டி ஏனைய இனத்தவர்கள் அதற்கு அடிமைபட்டு வாழவேண்டும் என்ற நோக்கில் பேரினவாதிகள் பல தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றனர். இப்பேரினவாதிகள் தொண்டமானின் பிரேரணைகளை முழுமையாக நிராகரிப்பார்கள் என்பது தெரிந்த விடயமாக இருந்தாலுங்கூட இந்த சந்தர்ப்பத்திலே இரண்டு முக்கிய விடயங்கள் ஆராயப்பட வேண்டியவையாகும்.

1. இலங்கையின் இனவாதப் பிரச்சினைக்கான தீர்வை காண்பதில் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய தகுதி தொண்டமானுக்கு இருக்கின்றதா?

2. ஜனாதிபதியும் அமைச்சர்களும் இது தொடர்பாக தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது ஏன் ?

தொண்டமானுடைய இ.தொ.கா. அரசியல் வரலாற்றை ஆராயும்பொழுது பல்வேறு காலகட்டங்களில் இந்நாட்டின் பேரினவாதிகளையும் பேரினவாதத்தையும் பாதுகாப்பதற்கு பல்வேறு சம்பவங்களின் மூலமாக ஒத்துழைத்து வந்துள்ளனர். உதாரணமாக 1967 ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கல் சட்டம் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப் பட்டபோது பாராளுமன்றத்தில் நியமன அங்கத்துவம் பெற்றிருந்த இ.தொ.கா. பிரதிநிதிகள் அச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் அவர்களை உடலுழைப்பாலும் சந்தா பணத்தாலும் அரசியல் ஆதரவாலும் வாழவைத்துக் கொண்டிருக்கும் மலையக தமிழர்களில் 6 இலட்சம் பேர் நாடு கடத்தப்படுவதற்கு ஆதரவளித்து பேரினவாதிகளுக்கு ஒத்துழைத்தனர்.

இலங்கை இனவாதப் பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்ப்பதற்காக வாக்குறுதியளித்து 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசு பேரினவாத ஆதிக்கத்தை இராணுவ வழிமுறைகளின் மூலமாக நிலைநாட்டுவதை நோக்கமாகக்கொண்டு 1979 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் தமிழீழ ஒழிப்பின் மூலமாக பேரினவாத ஆதிக்கத்தை நிலைநாட்ட இவ்வரசுக்கு ஆதரவளித்து வந்துள்ளார் தொண்டமான்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிக்கின்றதும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றம் வரவிடாமல் செய்வதுமான இலங்கை அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் பேரினவாதிகளின் நோக்கங்கள் நிறைவேற ஒத்துழைத்துள்ளார்.

மேற்கூறப்பட்டது போல தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் மலையக மக்களின் அபிலாஷைகளுக்கும் எதிராக செயற்படுவதன் மூலம் பேரினவாத அடிப்படையில் செயற்படுபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிவந்துள்ளவர் தொண்டமான். எனவே இப்படிப்பட்ட ஒருவர் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க தகுதியற்றவர் எனக்கூறும் பேரினவாதிகளின் கூற்றானது எவ்வித அடிப்படையும் அற்றது என்பதோடு **சிங்களவர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளக் கூடிய எந்த சிங்களவரையும் விட தொண்டமான் சிங்களவருக்கு விசுவாசமாக நடந்து கொள்வார் என்பதை நம்புவதற்கு இடமுண்டு.** தான் அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்காமலேயே இப்பிரே

→ பக்கம் 12 இல்.

**தொண்டமானின் தீர்வுக்கான யோசனைகள்.**

1) வட.கிழக்கு இணைந்த பிரதேசமாக இருக்கும்.

2) ஜனாதிபதியினால் வ.கி. மாகாண சபைக்கான ஆளுனர் மாகாணசபை முதலமைச்சரின் அனுசரணையுடன் நியமிக்கப் படுவார். (13வது திருத்தத்தின்படி முதலமைச்சரின் அனுசரணை இதற்கு தேவையில்லை.)

3) மாகாணசபையின் அமைச்சர்களின் தொகை 13வது திருத்தத்தின்படி ஐந்து., தொண்டமானின் முன் மொழிவுகளின்படி பத்து.

4) வட.கிழ. நீதிச் சேவைக்காக ஒரு கமிஷன் நியமிக்கப்படும். மேல்நீதிமன்ற நீதியரசர் இதன் தலைவராவர். இவர் தவிர இன்னுமிரு நீதியரசர்கள் இதில் அங்கம் வகிப்பர்.

5) வ.கி. மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் பிரதேச சபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாவட்ட சபை யூனியன் உருவாக்கப்படும். பெரும்பான்மையாக முஸ்லிம்களைக் கொண்ட மாவட்ட சபை முஸ்லிம் மாவட்ட சபையாக அறிவிக்கப்பட்டு அவற்றிற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

6) காணி, சட்டம் ஒழுங்கு, நீதித்துறை, நிதிநிறுவனங்கள் கல்வி, கலாசாரம், விவசாயம், மீன்பிடி, தொழிற்துறை வர்த்தகம் என்பவற்றில் இந்த யூனியன் நிர்வாக அதிகாரங்களைக் கொண்டிருக்கும். முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கென ஒரு முஸ்லிம் பிரதி பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படுவார்.

7) மாகாண சபையின் அனுமதியுடன் மாவட்ட சபை யூனியன் வெளிநாடுகளுடன் பொருளாதார தொடர்புகளைக் கொண்டிருக்க அனுமதிக்கப்படும்.

8) இப்பிரதேசத்தில் வாழும் பௌத்த சிங்கள மக்களின் சட்டம் ஒழுங்கு மற்றும் சொத்துரிமைக்கான பாதுகாப்பு வழங்கப்படும். இவற்றைக் கவனிப்பதற்கென ஒரு சிங்கள பிரதி பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவார். இன விகிதாசார அடிப்படையில் மாகாண பொலிஸ்படையில் சிங்கள முஸ்லிம்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

9) அரச காணி, மாகாண பொலிஸ் படையை உருவாக்குதல், வெளிநாட்டு உதவி உள்பட்ட பொருளாதார விடயத்தை மேற்கொள்ளல், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பன மாகாணசபையின் கீழ் கொண்டுவரப்படும்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல 6 அலோசாலை   கொழும்பு - 3   தொலைபேசி - 574047.

## கொக்கட்டிச்சோலை 166+

இன்றைய தலைப்புச் செய்தி
166+ தமிழர் கொக்கட்டிச்சோலையில் அகோரக்
-கொலை.
என்னை ஒன்றுமே செய்யவில்லை
நாளைக்கு பரீட்சை நடக்கும்
இன்றிரவுக்கு நான் படிப்பேன்

எத்தனை மோசமான காரியம் நடந்து விட்டது
மனம் விக்கி கரைந்திருக்க வேண்டும்
அந்த நேரம் எந்த பின்கதவை பற்றி
சிந்தித்திருப்பீர்கள்
உங்கள் வீட்டில் இப்படி நடந்தாலும்
வெய்யிலில் நிழலில் நின்றாலும்
அனல் வீசும் உங்கள் தெருவில்
நாய்ப்பீ கரைந்து ஓடும் மழை நாளில்
உங்கள் தெருவில் இப்படி நடந்தால்

எந்தப் பின் கதவு திறந்திருக்கிறது ?
அந்தப் பெரிய ஆண்களும்
சிரிக்கிறதைப் போல விக்கி விக்கி அழுதார்கள்
மார்பு மயிரிலும் கள்ளுமண்டி வெண்கறுப்பு மீசையிலும்
கண்ணீர் படிய அழுதார்கள்

நட்சத்திரன் செவ்விந்தியன்

## மலையக கைதுகள்

– நமது மலையக நிருபர் –

நவ 24. 1991 எல்ல பொலிஸ் நிலையத்திலிருந்து சில பொலிஸார் ஹின்டகல தோட்டத்தை நோக்கி ரோந்து போனார்கள். பொலிஸாரைக் கண்ட இளைஞர் குழு ஒன்று அவர்களைத் தாக்கிவிட்டு ஓடித் தப்பி விட்டனர். இந்தத் தாக்குதலில் எந்த ஆயுதங்களும் உபயோகிக்கப்படவில்லை.

இச்சம்பவத்தின் பின் அப்பகுதி தேடுதலுக்குள்ளாக்கப்பட்டது. வெளியாருக்குத் தனது வீட்டில் தங்க இடம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் தோட்டத் தொழிலாளி ஒருவர் கைது செய்யப்பட்டார். இவர் கொடுத்த தகவலின் படி கனவரல்ல தோட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என அழைக்கப்படும் மணி மாஸ்ரரைத் தேடி பொலிஸார் சென்றனர். பொலிஸார் சென்ற போது சுப்பிரமணியம் வீட்டிலில்லை. மறுநாள் சுப்பிரமணியம் பொலிஸ் நிலையத்திற்குப் போய் தானாகவே சரணடைந்தார். அவரும் அவரது சகோதரி சரோஜினி தேவியும் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸ் காவலில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர்.

இது ஒரு சம்பவம். இன்னொரு சம்பவம்; இவை நடைபெற்றுக் கொண்டிருந்த அதேகாலத்தில் கனவரல்ல தோட்ட மவுசாகலைப் பிரிவிலுள்ள தொழிலாளர்கள் சில முன்பின் தெரியாத நபர்களின் நடமாட்டத்தை அவதானித்ததுடன் அடையாளம் காண முற்பட்டனர். அப்போது அவர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுட முயன்றிருக்கிறார். தொழிலாளர்கள் இச்சம்பவத்தை பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் தேடுதலின் போது நாகராஜா என்பவரது வீட்டில் ஒருஎஸ்.எம்.ஜி., 250 தோட்டாக்கள், 20 கிலோ ஜெலிக்நைட் ஆகியவற்றை கண்டுபிடித்தனர். நாகராஜாவை கைது செய்ய முடியாததால் அவரது சகோதரியை பொலிஸார் விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர்.

இவை கிடைத்த தகவல்கள். இவ்விரு சம்பவங்களைத் தொடர்ந்து பதுளை, பசறைப் பகுதிகளில் ஐந்து பெண்களுட்பட நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். பலர் கடுமையான சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என நம்பப்பட்ட போதிலும் விசாரணைகள் இதை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. இத் தொடர்புகள் பெருமளவுக்கு தனிநபர் தொடர்புகளாகவே உள்ளதாக கருதப்படுகிறது.

இந்தச் சம்பவங்களுக்கும் புலிகளுக்குமான தொடர்பு விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தபடாத போதும் மலையகத் தமிழர்களுக்கெதிரான ஆயுதப்படைகளின் பீதியூட்டும் நடவடிக்கைகள் சிங்களக் கிராமங்களில் தமிழர்களுக் கெதிரான உணர்வை தூண்டி விடுகின்றன.

இதை எழுதிக் கொண்டிருக்கிற போது நடந்த இன்னொரு சம்பவம் மூன்று தமிழ் றிசேவ் பொலிசாரும், ஒரு தமிழ் சப் இன்ஸ்பெக்டருமாக மொத்தம் நான்கு பேர் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் மட்டக்களப்பையும், இருவர் மலையகத்தையும் சேர்ந்தவர்கள்.

இச்சம்பவம் கூட அப்பகுதிகளில் பதட்ட நிலையை ஏற்படுத்தவும், தமிழர் எதிர்ப்பினை தூண்டி விடவும் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டதாகக் கருத இடமுண்டு. ஏனெனில் கைது செய்யப்பட்ட றிசேவ் சப் இன்ஸ்பெக்டரிடம் பதுளை பசறைப் பகுதி தமிழ் வர்த்தகர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்புள்ளதென வாக்கு மூலமளிக்குமாறு கேட்டு சித்திரவதை செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதையடுத்து ஏழு தமிழ் வர்த்தகர்கள் பசறையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர மலையகத்தில் கடமையாற்றும் விசேட உளவுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாருக்கு ஏற்கனவே இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டிருப்பதும், அவ்வுத்தரவை ரத்துச் செய்ய இந்தப் பதட்டம் நிலவுவதை ஊக்குவிக்கிறார்கள் என்பதும் இன்னொரு தகவல்.

இந்தச் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு, மலையக இளைஞர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு என்று இவர்கள் கூச்சலிடுகிற போதெல்லாம் எழுகிற கேள்வி என்னவென்றால் புலிகள் இப்போது தான் மலையகத்திற்கு வந்திருக்கிறார்களா என்பது தான். ஏனெனில் 89 களில் இந்திய அமைதிப்படை புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது புலிகள் அரச அனுசரனையுடன் இந்த பதுளை - பசறைப் பிரதேசங்களுக்கு வந்து பாதுகாப்பாக இருந்துள்ளனர் என்பது ஏற்கெனவே எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனவே இப்போது மட்டும் புலி, புலியென கிலி காட்டுவதன் நோக்கம் தான் என்ன ?

இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் அள்ளிக் கொண்டு போகப்படுவதும், சித்திரவதைக் குள்ளாக்கப்படுவதும் தொடர்கிறபோது மலையக மக்களையே ஈடேற்ற வந்த பெரிய தொழிற்சங்கங்களும் தலைவர்களும் எங்கு போனார்கள் ? என்று தேட வேண்டியிருக்கிறது.

வழமை போல கைது செய்யப்பட்ட பிள்ளைகளை பார்க்க பெற்றோர் அனுமதிக்கப் படுவதில்லை. கணவனைப் பார்க்க மனைவி அனுமதிக்கப் படுவதில்லை. தொடர்கிற கைதுகளும் நிற்பதாயில்லை.

இந்த இடத்தில் தெளிவாக நாம் ஒன்றைச் சொல்லிக் கொள்ளலாம். இவ்வாறான கண்மூடித்தனமான கைதுகளும், சித்திரவதைகளும் மலையகத்தில் அமைதியை ஒரு போதும் கொண்டு வரப்போவதில்லை. அதே போல் யாராவது ஓரிருவரின் நடத்தைக்காக முழு சமூகத்தையுமே பழிவாங்குதலுக்குள்ளாக்குவது எந்த விதமான விளைவுகளை தந்திருக்கின்றன என திரும்பிப் பார்த்தல் வேண்டும்.

வட.கிழக்கு முன்னால் நிற்கிற உதாரணம்.

'அஹிம்சா மூர்த்திகளுக்கு இது சமர்ப்பணம்.

## தொண்டாவும்...

ரணைகளை இ.தொ.கா. வின் சார்பாக முன்வைத்துள்ளதாக தொண்டமான் கூறினாலும் இதுவரை காலமும் அரசுக்கு மிகவும் விசுவாசமான அமைச்சராக திகழ்பவர் என்ற அடிப்படையிலே அரசு தலைவர் பிரேமதாஸவுடனாவது இப்பிரேரணைகளை பற்றி கலந்துரையாடியிருப்பார் என்பதை சந்தேகமில்லாமல் ஏற்றுக் கொள்ளமுடியும். இப்பிரேரணையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பானம் செல்வதற்காக ஜனாதிபதியின் அனுமதியை கோரியபொழுதாவது இப்பிரேரணைகளை அவருக்கு கொடுத்திருப்பார். எனினும் இப்பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு போர்க்கொடியை உயர்த்திக்கொண்டு இனவாதவுணர்வுகளை கிளப்பிவிட்டு செயற்படும் பேரினவாதிகளின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு தொடர்ந்தும் மௌனமாக இருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸவின் நிலைமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. அதுவும் விசேடமாக ஜனாதிபதி பிரேமதாஸவை அமைச்சராகக் கொண்ட புத்தசாசன அமைச்சின் கீழ் இயங்குவதும் ஜனாதிபதி பிரேமதாஸவினாலேயே உருவாக்கப்பட்டதுமான "பிக்குமார்களின் அதியுயர் ஆலோசனை சபை" தொண்டமானின் பிரேரணைகளை நிராகரித்திருப்பதானது மிகவும் கவனிக்கக் கூடியதொன்றாகும். அதிகாரப் பங்கீட்டிற்கோ, சிறுபான்மையினரின் சமவுரிமைக்கோ அல்லது ஜனநாயக மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கோ முழுமையான எதிர்ப்பினைத் தெரிவித்து வந்துள்ள பௌத்த பிக்குகளின் தலைமையிலான பிக்குமார் ஆலோசனைச் சபையை நிறுவிய ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களின் ஆலோசனையும், அனுமதியும் இல்லாமல் பிரதான விடயங்களில் முடிவெடுக்க மாட்டேன் என வாக்குறுதியுமளித்துள்ள இவ்வேளையில் அவர்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் மௌனம் சாதிப்பதை விட வேறொன்றும் செய்ய முடியாதிருக்கிறாரா ? இல்லையென்றால் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதியைக்கோரிய தொண்டமானுக்கு இன்னும் அனுமதி கொடுக்காமலிருப்பது ஏன் ? அவர் விரும்பினால் தனிப்பட்ட முறையில் செல்லலாம் என்றாவது கூறியிருக்கலாமல்லவா ? அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதே தனது நோக்கமென கூறும் தொண்டமானின் யாழ்ப்பான பயணம் வெற்றியடைந்து அவரது பிரேரணையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த தயார் என விடுதலைப்புலிகள் சம்மதித்தால் ஜனாதிபதியின் நிலை என்னவாக அமையும் ?

எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே இ.தொ.கா. தலைவர் என்ற முறையில் தான் இப்பிரேரணைகளை முன்வைத்துள்ளேன். இது எனது சுயமுயற்சி எனக்கோரும் தொண்டமான் யாழ்ப்பாணம் செல்ல ஜனாதிபதியின் அனுமதியை நாடி நிற்பதன் நோக்கமென்ன ? தொண்டமானின் முயற்சிகள் பற்றி ஒன்றுமே தெரியாதவர் போல காட்டிக்கொள்ளும் ஜனாதிபதியின் நோக்கமென்ன ? எனக்கு எல்லாம் தெரியும் ஜனாதிபதி என்றவகையில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் எனக்குத் தெரியும், தேவையான நேரம் நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என ஜனாதிபதி கூறினால் அது பேரினவாத வெறியர்களின் ஆட்டங்களை ஓரளவிற்காவது அடக்குவதற்கு உதவும், பேரினவாத வெறியின் வளர்ச்சி தேவை என்பது தான் நோக்கமா ?

எது எப்படியிருந்தாலும் ஒரு விடயத்தை மட்டும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இனவாதப் பிரச்சினையைச் சந்தர்ப்பவாத நோக்குடன் பயன்படுத்தி அரசியல் இலாபம் சம்பாதிக்கும் அரசியல்வாதிகளினாலும், இனவாதிகளாலும் குட்டிச்சுவராக்கப்பட்டுவிட்டது இந்த நாடு. மேலும் இந்நாட்டை பாழாக்காதீர்கள். இந்த நாடு சிங்கள, பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமான நாடல்ல. சிங்கள, பௌத்தர்கள் மட்டும்தான் ஆளும் அதிகாரத்திற்கு உரித்தானவர்களல்ல. எனவே இந்நாட்டில் வாழ்கின்ற அனைத்து இனங்களினதும் அரசியல் சுதந்திரத்தையும், சுயாட்சிக்கான உரிமைகளையும் அங்கீகரித்து இலங்கை அரசியலில் சமஷ்டி அமைப்பை உருவாக்கி ஐக்கிய இலங்கையின் கீழ் சமத்துவத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு ஆளும் அரசாங்கத்தைச் சார்ந்தது. பிரிந்திருக்கின்ற நாட்டைச் சேர்த்துவைக்க வேண்டுமானால் இருப்பதே இது ஒரு வழியே.